மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 6 / சூன் 2018 / ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி / விலை : ரூ.10/-





## முதல்வரின் பார்வை மக்கள் பக்கம் திரும்புகிறதா?



## மனுவாதிகள் மாறவில்லை



## கொரியத் தமிழ் தொடர்புகள்

நா.கண்ணன் உரை

# காவல் அரண் சரிந்தது!



கனல் மாத இதழின் ஆசிரியர்

## மாவீரன் J.குரு

அவர்களுக்கு

**முற்றம்** மாத இதழின்

## வீ ர வ ண க் க ம் !

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly Jun 2018

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
**சு.மணிமாறன்**
**அலெக்சாண்டர்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை- 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

மனுவாதிகள் மாறவில்லை (தலையங்கம்)........................................ 4

கல்விப் போராட்டம்
-பேராசிரியர் ஆரென்........................................ 5

கம்போடிய நாட்டில் நடந்த தமிழ் மாநாட்டில்
முனைவர் நா.கண்ணன் அவர்களின் உரை........................................7

தூத்துக்குடி வழக்கறிஞர்களுக்கும்
நீதிபதிகளுக்கு ஒரு சல்யூட்
-க.கனகராஜ்........................................ 11

முதலமைச்சர் பார்வை
மக்கள் பக்கம் திரும்புகிறதா? ........................................13

யார் நீங்க?........................................ 15

சித்த மருத்துவக் குறிப்புகள்
- மருத்துவர் சி. இராஜா சாக்ரட்டீஸ்........................................ 16

தொடங்கிவிட்டது தமிழ்நாட்டில் இனப்படுகொலை (கவிதை)
- கவிபாஸ்கர் ........................................17

வைகை ஆறு........................................ 19

சுட உத்திரவிட்டது ராஜ்நாத் சிங்
- மின்னம்பலம்........................................ 21

இப்போது நீங்கள் நடத்த வேண்டியது
நீட் தேர்வுக்கு எதிரான ஜல்லிக்கட்டு ........................................22

மது, மாதுவையும் கெடுக்கும்........................................ 24

சேதுகால்வாய் எங்கே தோண்டினாலும் ஆபத்தா
- டி.எஸ்.எஸ். மணி ........................................26

பிடிக்க முடியாத பயங்கரவாதி சேகர் ?
-வேர்மகள் ........................................28

பொடுகு ( dandruff)........................................ 30

அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஆபத்து மனித உரிமைகள் மீது
தாக்குதல் கோவா கிறித்தவ பிஷப் எச்சரிக்கை........................................ 33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# மனுவாதிகள் மாறவில்லை!

மனுவாதிகள் என்றுமே மாறமாட்டார்கள் என்பதற்கு குடியரசுத்தலைவரை கோவிலுக்குள் அனுமதிக்காத நிகழ்ச்சியே சான்றாக இருக்கிறது. குடியரசுத்தலைவரின் துணைவியாருக்கு நடக்க இயலாது, ஆகவே படிக்கட்டில் அமர்ந்து பூசை செய்தார் என்பது நம்பும்படியாக இல்லை. ராஜஸ்தான் மாநிலம் புஷ்கரிலுள்ள கோயிலில் நடந்துள்ள இந்நிகழ்வு வர்ணாசிரமம் இன்னும் தலைவிரித்தாடு கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஒரே தேசம் இந்து தேசம் என்று பித்தலாட்டம் செய்து கொண்டிருக்கும் மனுவாதிகள், சாதி என்று வந்து விட்டால் அவரவர் நிலையில் மற்ற சாதியினரை ஓரங்கட்டுவது, அவமதிப்பது போன்ற செயல்களில் இறங்கி விடுகிறார்கள்.

வெள்ளைக்காரனால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்து என்ற மதம், தங்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கிறது என்று அறிந்து, அதை இதுகாறும் பயன்படுத்தி வருபவர்கள்தான் மனுவாதிகள். இந்து என்ற போர்வையில் சைவம், வைணவம், லிங்காயத்து போன்ற பல மதங்களை ஒன்று சேர்த்தவர்கள், அவர்களை எல்லாம் இந்து என்று மூளைச்சலவை செய்து, அவர்களது பாதுகாப்பில் கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள். மூளைச்சலவை செய்யப் பட்டவர்கள் அப்படியே இருந்து விடுவார்களா என்ன? என்றாவது விழித்துக் கொள்வார்கள் அப்போது மனுவாதிகளின் நிலைமை படுமோசமாகிப் போய்விடும்.

மனிதரில் உயர்வு தாழ்வு என்ற நிலை வர காரணமாக இருந்த மனுவாதிகளின் சூழ்ச்சிகளை இந்திய ஒன்றியத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் புரிந்து கொண்டாக வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமையாக இருக்கும் இப்பெருநாட்டில் ஏதோ ஒன்றை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று பேசுவது தவறான அணுகுமுறையாகும். தேசப்பற்றைப் பேசும் மனுவாதிகள் இந்துத்துவத்தைப் பேசும் மனுவாதிகள் உலகில் உள்ள கிறித்தவ, இஸ்லாமிய, பௌத்த, பொதுவுடைமை நாடுகளுக்கு ஏன் செல்ல வேண்டும். அங்குள்ள குடிமக்களின் தயவில் ஏன் வாழ வேண்டும். கடல் தாண்டக்கூடாது என்று சொன்ன அவர்களது சாத்திரங்களை ஏன் மறக்க வேண்டும். எல்லாம் ஏமாற்று வேலை.

இந்திய ஒன்றியத்தில் இனியும் மனுவாதிகளின் ஏமாற்று வேலையை அனுமதிக்கக்கூடாது. அன்றி லிருந்து இன்றுவரை ஆளும் அதிகார வர்க்கத்தில் இருந்து கொண்டோ, அல்லது அதிகார வர்க்கத்திற்கு அடிவருடிக் கொண்டோ, அதிகாரத்தில் இருப்பவர் களுக்கு அடிமைச் சேவகம் செய்து கொண்டோ தங்கள் வயிற்றை நிரப்பிக் கொண்டு, மண்ணின் மைந்தர்களை வஞ்சித்து வாழும்? மனுவாதிகளை வேரறுக்க வேண்டும். அப்போதுதான் இந்தியா வல்லரசாகும்.



# கல்விப் போராட்டம்

தமிழகத்தில் இன்று நிலவி வரும் மிகப்பெரிய பிரச்சனைகல்விப்பிரச்சனை. கல்வி அறிவு இல்லாதவர்கள் கல்விநிறுவனங்களின் உரிமையாளர்களாக இருக்கின்ற காரணத்தால் தங்களின் சுயநலத்திற்காக மாணவர்களின் வாழ்க்கையைஅடமானம் வைக்கின்றார்கள். காரணம் ஒரு கல்விநிறுவனத்தை நடத்துபவர் பெரிதும் அந்தபடிப்பைப்பற்றிய தெளிவு இல்லாமல் இருப்பதும் அதற்கு முக்கியக் காரணம். இதனால் கல்வியின் அடிப்படை நோக்கமேசின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிற சூழலை நாம் காண்கிறோம்.

கல்வி ஒரு சமூகத்திற்கு மிகப்பெரியஅடிப்படை தேவை. எந்த ஒரு கல்வியும் நாம் வாழுகிறசமூகத்தோடு இணையவில்லை என்றால் அதில் அர்த்தமில்லை, பொருளில்லை. ஆனால் இன்றையகல்விச்சூழல் என்பது ஏதோ பணம் சம்பாதிக்கிற ஒரு முன்முதலீடாகமட்டுமே பார்க்கப்படுகிறது.

கல்வியை ரசித்து, தன் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகிற ஒரு கல்விதான் நாட்டுக்குத் தேவை. அது வள்ளுவன் காட்டிய கல்வி, பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் பெற்றுக் கொண்ட கல்வி. அனால் அத்தகையதொரு கல்வியைஇந்தச் சமூகம் தரத் தவறி இருக்கிறது என்பதை துணிவோடு நாம் இன்று ஒத்துக் கொள்ள வேண்டும்.

இந்தகாலத்து ஆசான்கள்அதாவது, ஆசிரியர்கள் தங்களுக்கு வெறும் பணம் சம்பாதித்துக் கொடுக்கின்ற ஒரு இடமாகத்தான் கல்விச்சாலைகளைப் பார்க்கின்றனர். அதற்குக் காரணம், கல்விநிறுவனம் என்பது ஏதோ மாணவர்கள்என்ற பொருளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை என்று எண்ணும் நிலை வந்ததே காரணம். தீமையைவிலக்குவதும், நன்மையை ஏற்பதும், மாணவனைமாமனிதனாக உருவாக்குவதுமேகல்வியின் நோக்கம். அத்தகையதொரு கல்வியை தருவதற்கான கல்விதிட்டம் தீட்டுகின்ற ஒரு அமைச்சரவையும் நம்மிடம் இல்லை. அறிவார்ந்த பெருமக்களும் முடிவெடுக்கின்றஇடத்தில் இல்லை. அதைமறுத்துப் போரிடவும் துணிந்தோர் இச்சமூகத்தில் இல்லை.

வணங்காமுடி வள்ளுவன் சொன்ன கல்விதான் உண்மையான, தேவையானகல்வி. அதுவே வாழ்க்கைக் கல்வி. அதை இன்றேனும் நாம் கடைபிடிக்க வேண்டுமென்பதே அறிவுடைமையாகும். அவ்வாறொரு கல்விஅமைந்தால் தான் சமூகத்தில் அறம் சார்ந்த படித்த அறிவுடைய பெருமக்களை நாம் எங்கும் காண முடியும். இது போன்ற ஒரு சூழல் இன்னமும் நீடித்தால், இன்னும் இந்தசமூகம் நல்லமனிதர்களையும் தலைவர்களையும் பெறுவது மிகக் கடினம். வெறும் வெற்றுமதிப்பெண்கள் பெறுவதாலோ, விழுக்காடு



பெறுவதாலோ தனக்கும் இந்தச் சமூகத்திற்கும் எவ்வித வளர்ச்சியையும் நிச்சயம் தர முடியாது. நீங்கள் படிக்கின்றவிடையங்களில் எந்த அளவுக்கு ஆழமாகச் செல்கின்றீர்கள்என்பதிலேதான் வளர்ச்சியைநீங்கள் காட்ட முடியும்.

கல்வியென்பது ஒருவனுடைய மூளையில் விடயங்களைத் திணிப்பதல்ல. அப்படித் திணிக்கப் படும் விசயங்கள்ஜீரணமாகாகமல் வாழ்நாள் முழு வதும் குழப்பம் உண்டாக்கிக் கொண்டிருக்கும். வாழ்க் கையை உருவாக்குகிற ஆண்மையை உண்டாக்குகிற, ஒழுக்கமூட்டுகிறகல்வி வேண்டும்.

கருத்துக்கள் ஜீரணமாக வேண்டும். நீங்கள்ஐந்தே ஐந்து கருத்துக்களை நன்றாகக் கிரகித்து அவற்றை உங்களது வாழ்க்கையிலும் ஒழுக்கத்திலும் நிறைந்த தாகச் செய்வீர்களாயின் ஒரு பெரிய புத்தகசாலை முழுவதையும் மனப்பாடம் செய்தவனைவிடப் பெரிய கல்விமான் ஆவீர்கள்.

ஆகையால் நமது இலட்சியம் நம் தேசத்துக்குக் கல்வி, ஞானமனைத்தையும் பெறுவதாக இருக்க வேண்டும்.

நமது தார்மீக லௌகீக, ஞானம் அனைத்தும் அடங்கியஅந்தக் கல்வி ஞானத்தை சாத்தியமான வரையில் நமது தேசிய வழிகளில் தேசிய அடிப்படைக ளில் நாம் கைக்கொள்ள வேண்டும்.

பேராசிரியர் ஆரென்,
சென்னை.

## அதிக கட்டணம் வசூலிக்க எந்த சிஸ்டம் அனுமதிக்கிறது?




டாக்டர் அன்புமணி ராமதாஸ் எம்.பி.கேள்வி

நடிகர், ரஜினிகாந்த் நடித்த “காலா“ திரைப்படம் வருகிற 7ஆம் தேதி வெளி யாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற் கான அதிகாரப்பூர்வ முன்பதிவு தொடங் கிய நிலையில், அந்த படத்துக்கான நுழை வுச் சீட்டுகள் (டிக்கெட்) கள்ளச்சந்தையில் விற்கப்பட்டு வருகின்றன. முதல் 2 நாட் களுக்கான ஒரு நுழைவுச்சீட்டுக்கு ரூ.1,000 முதல் 2 ஆயிரம் வரை விலை நிர்ணயிக்கப் பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

“காலா“ திரைப்படத்தை பொறுத்த வரை அதிகாரப்பூர்வ மாகவே ரூ.207.25 வரை நுழைவுச்சீட்டு கட்டணம் வசூலித்துக்கொள்ள அனுமதிக் கப்பட்டிருப்பதாக கூறப்படு கிறது. இதுவே இயல்பை விட அதிகமான கட்டணம் எனப்படும் நிலையில் இதைவிட 10 மடங்கு கூடுதலாக கட்டணம் வசூலிக் கப் படுவது எந்த வகையில் நியாயம் என்பது தெரியவில்லை. இந்த அத்துமீறல்களை எந்த சிஸ்டம் அனுமதிக்கிறது? என்பதும் புரியவில்லை.



“காலா“ திரைப்படத்தை நிர்ணயிக்கப்பட்டதை விட கூடுதல் கட்டணம் கொடுத்து பார்க்கக்கூடாது என்று தன்னுடைய ரசிகர்களுக்கு நடிகர் ரஜினிகாந்த் அறிக்கை மூலமாகவோ, காணொலி பதிவு மூலமாகவோ உடனடியாக அறிவுறுத்தவேண்டும். கூடுதல் கட்டணம் வசூலிக்கும் திரையரங்குகள் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற் கொள்வதுடன், அந்த திரையரங்குகளில் “காலா“ திரைப்படம் திரையிடப்படுவதை தயாரிப்பாளர் மூலம் தடுத்து நிறுத்தவும் ரஜினிகாந்த் முன்வர வேண்டும். அப்போது தான் ரஜினிகாந்த் அவரது நம்பகத்தன்மையை உறுதி செய்ய முடியும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கம்போடிய நாட்டில் நடந்த தமிழ் மாநாட்டில்

## முனைவர் நா. கண்ணன் அவர்களின் உரை

இந்த மாநாட்டிற்கு நான் ஒரு ஜெர்மன் குடிமகன் என்ற அளவில் நான் வந்திருக்கின்றேன்.

கீழடிக்கு மிக அருகில் உள்ள திருப்புவனம் என்ற ஒரு கிராமத்தில் பிறந்து மதுரையில் படித்து ஜப்பானில் முனைவர் பட்டம் பெற்று ஜெர்மனியில் இருபது ஆண்டுகள் பேராசிரியராக இருந்ததால் அங்கு ஜெர்மன் குடியுரிமை பெற்று பின் கொரியாவில் 9 ஆண்டுகள் இருந்து கொரியாவிலிருந்து நான் மலேசியாவிற்கு உதவியதால் மலேசியாவில் நான் இருக்கின்றேன். எனவே நான் என்னை ஒரு உலகக் குடிமகன் என்று தான் சொல்லுவேன்.



ஆனால் இந்த ஆய்விற்கு வந்த பிறகு தான் எனக்கு தெரிந்தது, எனக்கு முன்னாடியே என் முன்னோர்கள் சங்க காலத்திற்கு முன்னாடியே அவர்கள் உலக குடிமக்களாக இருந்திருக்கின்றார்கள். நான் பல நேரம் யோசிப்பேன், கனியின் பூங்குன்றன் எத்தனை ஊர் போயிருப்பார் அவர் எப்படி "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற ஒரு மந்திரச் சொல்லை எப்படி சொல்லிருப்பார் என்று பல காலம் நான் யோசித்ததுண்டு. உண்மையில் கணியின் பூங்குன்றன் இருந்த காலத்தில் தமிழன் உலகின் எல்லாப் பகுதியிலும் பரவி இருந்திருக்கின்றான். அதற்கான சான்றுகள் இப்பொழுது ஒவ்வொன்றாகக் கிடைக் கின்றன.

நான் கொரியாவில் வாழ்கின்ற பொழுது மிகச் ஆச்சரியமான வகையில் கொரியாவுக்கு தமிழுக்கும் தொடர்பு இருக்கும் என்று நான் கனவில் கூட நினைத்து பார்த்ததில்லை. அங்கு போய்க்கொண்டிருக்கும் போது ஒரு குழந்தை வந்து அப்பா என்றது, என் பொண்ணு தான் கூப்பிடிறாளோனு திரும்பிப் பார்த்தேன் அவ அப்பாவ அழைத்திருக்கிறார். ஓ...இங்கேயும் அப்பானு தான் கூப்பிடுவாங்க போலனு...அப்புறம் கொஞ்ச தூரம் போன உடனே அம்மானு கூப்புடுது. அம்மாவ அம்மானு கூப்பிடு றாங்க, ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. எப்படி

கொரியாவில் அம்மா, அப்பா, கூப்பிடுறாங்க. இது என்ன அதிசயம் என்று நினைச்சேன். அதற்குப் பிறகு ஆய்வுகள் கொஞ்ச உள்ளே போனது. அப்புறம் தான் தெரிஞ்சது. ஒரு பெரிய சரித்திரம் இதற்குப் பின்னால் புதைந்து கிடைக்கிறது என்று.

கொரியாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன் தமிழகத்தில் இருந்து ஒரு புறப்பட்ட ஒரு பெண் வந்து அங்கு இறங்கி சிம்ஸ்ரோ என்ற சொல்லக்கூடிய ஒரு கொரிய மன்னனைத் திருமணம் செய்து, அவள் முதல் முதலாக காயா என்ற ஒரு சின்ன அரசாட்சியை உருவாக்குறாள். இந்த அரசாட்சி எப்படி வந்தது. அவள் சாகும்போது சொல்லிருக்கின்றாள், என் குழந்தைகள் என்னை வந்து தாய் தந்தையை அழைப்பார்களோ அதேபோல் கொரியமக்கள் அனைவரும் தங்கள் தாய் தந்தையரை அம்மா அப்பா என்று அழைக்க வேண்டும். அம்மா அப்பா என்று சமஸ்கிருதத்தில் யாரும் சொல்வதில்லை அருகில் இருக்கின்ற ஜப்பானுக்கு போனால் ஒக்தோசான் ஒக்காசான் என்று சொல்றாங்க. அம்மா அப்பா என்று அப்படியே அச்சுப்பிசகாமல் இருக்கிறது. அங்கு ஒரு மொழி உண்டு. அதன் பெயர் ஹங்குல். அந்த மொழியை ஆராய்ந்து பார்த்தால் மிக ஆச்சரியமான வகையில் ஹங்குல் மொழி உயிரும் மெய்யும் சேர்ந்து உயிர்மெய் என்று வரும் தமிழ் நெடுங்கணக்கை அப்படியே ஒரு ரோல் மாடலாக எடுத்து உருவாக்கப்பட்டிருக்கு. இது எனக்கு ரொம்ப ஆச்சரியமா போச்சு. அதற்கு அப்புறம் அங்கு உள்ள எழுத்துருக்களை எல்லாம் பார்த்தால் தமிழில் உள்ள ப, ல, ம என்று பல எழுத்துக்கள் தமிழ் எழுத்தை அச்சாக எடுத்துக்கொண்டு அந்த ஹங்குல் என்ற மொழியை உருவாக்கியுள்ளார்கள்.

இந்த தமிழ்த் தொடர்பு கொரியாவிற்கும் தெரியாது. தமிழர்களுக்கும் கொரியாவுக்கும் தொடர்பு இருப்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. இந்த காலகட்டத்தில் தான் செம்மொழி மாநாட்டில் நான் இதைப்பற்றி பேசினேன். பெரிய வரவேற்பு இருந்தது. இதேபோல், கொரியாவில் இருக்கக்கூடிய கிம் என்று சொல்லக்கூடிய ஒரு பத்திரிக்கையாளருக்கு இதே நம்பிக்கை இருக்கிறது. தமிழுக்கும் அவருக்கும் தொடர்பு இருக்கின்றது. அப்ப நாங்க இதை பற்றிப் பேச ஆரம்பித்தோம்.

மின்தமிழ் என்ற ஒரு அமைப்பு இருக்கின்றது. அந்த மின்தமிழில் இதைப்பற்றி நான் விரிவாக பேச பேச நண்பர் பாலு அவர்கள் துணையோடு இரண்டு உலக கருத்தரங்குகள் பண்ணிருக்கோம். அந்த கருத்தரங் கங்கள் வாயிலாக இந்த தமிழ் மொழிக்கும் கொரிய மொழிக்கும் உள்ள தொடர்பு தமிழ் நாட்டிற்கும் கொரிய நாட்டிற்கும் உள்ள தொடர்பு இவைகளைப் பற்றி விரிவாக நாங்கள் பேசி இருக்கின்றோம். இதில் என்ன ஆச்சரியம் என்றால் ஒரு பொருளாதார ரீதியில் கொரியாவும் இந்தியாவும் இங்கிலீஸ் காலனியாக இருந்திருக்கு அமெரிக்கா கான்ஸ்டியூஷன் எடுத்து ருக்கு ஆனால் அமெரிக்காவோ, பிரிட்டனோ இன் வெஸ்ட் பண்ணாத அளவுக்கு கொரியர்கள் அங்கிருந்து வந்து கோடி கோடியா கொட்டியிருக்காங் கனு தமிழகத்துல. இது என்ன ஆச்சரியம் அப்படினா அவங்கள் கேட்டா அவங்களுக்கே இந்த இது இருக்கு டிரேன்பெரன்ஸ் சொல்லுவாங்க. அத்தகைய ஒரு மனோவியல் அவங்க நினைக்கிறாங்க தன்னுடைய உறவுகள் நமது தமிழர்கள் அப்படின்னு நினைக்கி றார்கள்.

இதில் என்ன வேடிக்கைனா நானும் பாலுவும் செஞ்சது என்ன அப்படின்னா அங்க ஆரம்பித்த ஒரு பேராசிரியர் அவர் என்ன சொல்லிருக்காரு. இந்த பொண்ணு அயுக்தா என்று ஒரு இடத்தில் இருந்து வந்தது என்று சொல்லி, அதை அயோத்தியான்னு நினைச்சு வடநாட்டுக்கு கொண்டு போயிட்டாரு. நானும் பாலுவும் பெரிய முயற்சி செஞ்சு அந்த பொண்ணு அயோத்தியா பொண்ணு கிடையாது. அப்ப அயோத்தின்னு ஒரு நகரமே கிடையாது. நாங்க மேப் எல்லாம் ஆய்வு பண்ணித்தான் சொன்னோம். அந்தப் பெண் தமிழகத்திலுள்ள ஆயர்குலத்தை சேர்ந்த பெண் என்று நாங்கள் உறுதிப்படுத்தினோம். நான் கீழடினு ஏன் பெருமையா சொல்றேன் அப்படின்னா...எங்க திருப்புவனம் ராஜகம்பீரம், இங்க பாத்திங்கன்னா...வைகை நதி ஒரு காலத்தில் மிக ஆழமாகவும் விரிந்தும் வையை என்னும் பொய்யாக் குலக்கொடி என்கிறார் சிலம்பில். அப்ப பொய்க்காத ஒரு நதியாக அது இருந்திருக்கின்றது. அந்த நதியில் இப்பொழுது எப்படி நயில்நதி நாகரிகம் இருந்ததோ...அதேபோல் அத்தியூத்துவில் ஆரம்பித்து மதுரை வரை வந்து கப்பலில் வந்து போய்க் கொண்டிருந்திருக்கிறார்கள்.

இப்பொழுது பாருங்கள் கீழடியில் கிடைத்துள்ள அந்த சான்றுகள் மிகத் தெளிவாக செப்புகின்றன. மொகஞ்சதாரோ கரப்பாவில் இருந்த அதே நாகரிகம், நகர்ப்புற நாகரிகம் என்பது மதுரையில் இருந்திருக் கின்றது. அவ்வளவு தொன்மையான நாகரிகம் இருந்ததால், கடல் வணிகங்கள் செய்து கொண்டிருந் ததால் இந்த பெண் இங்கிருந்து பௌத்தத்தையும் எடுத்துக்கொண்டு போயிருக்கின் றாள். இதில் இனனொரு முக்கியமான பாயின்ட், தமிழர்கள் பௌத்தத்தை மறந்து விட்டோம். இப்பொழுது நாம் சைவர்கள், வைணவர்கள் என்ற அறிமுகப்படுத்திக் கொள்கிறோம். ஆனால், இங்கிருந்து போனது பௌத்த மொழியாகத்தான் போகிறது. இரண்டு

முக்கிய சான்றகள். ஒன்று உலகில் எந்த மொழியும் இல்லாத முதல் ஐம்பெருங் காப்பியங்கள் வணிக காப்பியங்களாக இருக்கின்றன. பாத்திங்களா தமிழில். சிலப்பதிகாரம் எடுங்க, மணிமேகலை எடுங்க எல்லாம் வணிக குடிமக்களைப் பற்றியே இருக்கும் சோ, பிஸ்னஸ், டிரேட் இது இரண்டும் தமிழர்களின் உலகமெங்கும் பரவ வைத்திருக்கின்றது.

இன்னொரு ஆச்சரியமான விஷயம் இந்த கம்போடியா நாட்டில் உள்ளது. இவங்களோட எழுத்துமுறைக்கு பேரு பல்லவ கிரந்தம் என்று பெயர். இந்த பல்லவ கிரந்தத்தை ஏன் ஒரு தமிழன் உருவாக்குறான் என்றால், உலகம் முழுவதும் பேசக் கூடிய ஒரு மொழிக்கு ஒரு எழுத்துரு உருவாக்க முடியுமா என்ற முதல் முயற்சி அது. இவர்கள் பேசுறது நமக்கு புரியாட்டாலும், நமக்கு பல்லவகிரகந்தம் புரிந்தத என்றால், இவங்க என்ன பேசுறாங்கனு நாம புரிஞ்சிக்கலாம்.

ஜெர்மனியில் நான் ஸ்டார்ட் பிப்லியோதிக் என்பார்கள். அங்குள்ள நூலகத்த்தை அப்படி அழைப் பார்கள். அந்த நூலகத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது, போனேன். நாம் வங்கிகளுக்குச் செல்கிறோம். வங்கிகளில் பங்கர்ஸ் என்று சொல்லுவார்கள். இரண்டு மூன்று நிலைக்கு கீழே பணத்தை பத்திரமாக வச்சிருப்பாங்க. பாம் போட்டாலும் உள்ள போக முடியாது. அந்த மாதிரியான எடத்துக்கு அந்த நூலகர் என்னை அழைத்தக் கொண்டு போனார். எதைக் காட்டப் போகிறார். இவ்வளவு தூரம் பெர்லின்ல என்று எனக்குள் எண்ணம். சரி என்று அவருடன் போய்க் கொண்டிருந்தேன். அங்கே ஒரு ஏர்கண்டிசன் அறை. அதில் ஒவ்வொரு சிறு சிறு பகுதியையும் திறந்து காட்டினார். எல்லாம் தமிழ் ஒலைச்சுவடிகள் தமிழ் ஓலைச்சுவடிகள். அதில் திருக்குறள் இருந்தது. எடுத்து நான் வாசித்தேன். அன்புடைமை. அன்புடைமை என்று வாசித்தவுடன் அவர், உன்னால் வாசிக்க முடியுமா? என்று கேட்டார். முடியும், இது தமிழ்தானே என்றேன். அவருக்கு வியப்பாகிப் போய்விட்டது.

ஆக அங்கு நீங்க அங்க பார்த்தா திருவாய் மொழி முதல் அத்தனையையும் அவர்கள் மிக பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். அப்பொழுது தான் எனக்குப் புரிந்தது. ஒரு ஜெர்மன்காரன் தமிழ் ஓலைச்சுவடிகளை பத்திரமாக வைத்திருக்கிறான். நாம என்ன செய்து கொண்டிருக்கின்றோம். தமிழகத்தில் எத்தனையோ ஓலைச்சுவடிகளை பரண்ல வச்சிருவாங்க. அது அப்படியே அழிந்துபோயிடும். போகி பண்டிகை அன்று எரித்துவிடுவார்கள்.

ஒரு வகையில் யோசித்துப் பார்த்தீர்கள் என்றால் ஓலைச்சுவடிகள் ஒரு பெரிய டேட்டாபேஸ், தமிழனுடைய அறிவு, தமிழனுடைய ஓலைச்சுவடிகளில் பார்த்தால், தமிழன் கணிதத்தைப் பற்றி பேசிருக் கின்றான். 60% சதவீதமான ஓலைச்சுவடிகள் மருத்துவ ஓலைச்சுவடிகள். அய்யா தணிகாசலம் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். அவ்வளவு மருத்துவச் சுவடிகள். இந்த மருத்துவச் சுவடிகள் 60% மருத்துவக் குறிப்பு களை தமிழர்கள் தான் உருவாக்கியிருக் கிறார்கள். மருத்துவத்தில் மிகச் சிறந்த நிபுணர்களாக தமிழர்கள் இருந்திருக்கிறார்கள்.

ஒரு ஓலைச்சுவடி ஒரு புத்தகம் என்று வைத்துக் கொள்ள வேண்டும். ஒப்பனைக்கான புத்தகம் இருக்கு, சமையலைப் பற்றி இருக்கு, வாண சாத்திரம் இருக்கு. நான் அப்துல்கலாமை இரண்டு முறை சந்தித்தேன். அவரிடம் நான் இதைச் சொன்னேன். அய்யா, இந்த மாதிரி வாணசாத்திரம் என்ற ஒரு நூல் இருக்கு ஐயா என்றேன். எந்த நானா? என்று கேட்டார் மூன்றுசுழி நாணா என்றேன். முன்றுசுழி நாணாவா, அப்ப அது ராக்கெட் டெக்னாலஜி இல்லையா என்றார் ஆமா சார் ராக்கெட் டெக்னாலஜி தான். ராக்கெட் டெக்னாலஜி பற்றி தமிழில் இருக்கா என்று கேட்டார். இருக்கு சார் என்று சொன்னேன். அந்த நூல எடுத்துட்டு வாங்க கண்ணன் என்று சொன்னார். அப்படி ஒரு நூல் இருக்கிறது. வாண சாத்திரம் போகர் என்பவர் எழுதியது. முதலில் என்னால நம்ப முடியவில்லை. ஆனால், இப்பொழுது இந்த ஆய்வில் இறங்கிய பிறகுதான் எனக்குப் புரிகின்றது.

முதலில் நான் நினைத்தேன் கொரியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் என்ன தொடர்பு என்று. ஆனால், தென் கிழக்கு ஆசியாவில் ஆய்வு செய்யச் செய்ய மிகத் தெளிவாகத் தெரிகின்றது. தமிழகத்திற்கும் பர்மாவிற்கும் உள்ள தொடர்புகள் பற்றிய சான்றுகள் இருக்கின்றன. தமிழகத்திற்கும் தாய்லாந்திற்கும் நிறைய சான்றுகள் இருக்கு. தமிழகத்திற்கும் கம்போடியாவிற்கும் சான்றுகள் இருக்கின்றன. நந்திக்கலம்பகம் எழுதிய நந்திவர்மன் இங்கு இருந்து வந்து அங்கு ஆண்டிருக்கின்றான். ஆக கம்போடி யாவுக்கும் தமிழ்நாட்டிற்கும் தொடர்பு இருந்திருக் கிறது. வியட்னாமிற்கும் தமிழ்நாட்டிற்கும் இருக்கிறது. மலேசியா சொல்லவே வேண்டாம். மலேசியாவ் அக்கறைச் சீமை என்று சொல்லுவோம். அதற்குப் பிறகு இன்தோனேசியா முழுக்க சான்றுகள் இருக் கின்றன. அப்ப இவ்ளோ தூரம் தமிழ் தடங்கள் இருக்கும் பொழுது அடுத்த ஸ்டெப் கொரியா, சைனால இருக்கு. சைனாக்கு அடுத்து கொரியா பெரிய ஆச்சரியமே இல்லை.

முதலில் சொல்லும்போது பலபேர் நம்பவே இல்லை. கொரியாவுக்கும் தமிழுக்கும் தொடர்பு இருக்கிறது என்று. ஆனால் தொடர்பு நிச்சயமாக

இருக்கின்றது. அதற்கு அடுத்தாக ஜப்பானுக்கும் போகின்றது. இந்த யாயோயி அதாவது இந்த மக்கள் தமிழகத்தில் இருந்து வந்து போன மக்கள். யாயோயி குடிகள் என்பவர்கள் நமது ஆயர்குடிகள் தான். இவர்கள் தான் இங்கிருந்து அங்கு போய் இந்த பண் பாட்டை சங்க தமிழைப் பரவச் செய்திருக்கின்றனர். சங்க தமிழிலிலுள்ள 4000 சொற்களை ப்ரொபசர் ஓனோ அவர்கள் லிஸ்ட் பண்றாரு. தமிழுக்கும் ஜப்பானிய மொழிக்கும் உள்ள ஒற்றுமை. ஆக தமிழன் பரந்து பட்டு இருந்திருக்கின்றான். அதற்கு அடிப் படையாக வாணிபம் என்பது மிக முக்கியமாக இருந்திருக்கின்றது. வாணிபத்தின் ஊடாக தமிழன் தம்முடைய கலாச்சாரம், பண்பாடு, சமயம், மொழி இவைகளை உலகெலாம் பரப்பியிருக்கின்றான். நமக்கு மீண்டும் இப்பொழுது, இணையம் என்ற ஓர் அமைப்பு ஒன்று கிடைத்ததுக்குப் பிறகு நமக்கு இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சியான ஒன்று. இந்த மாநாட்டினுடைய சிறப்பு என்னவென்றால் வாட்ஸ்அப் என்று சொல்லக்கூடிய ஒரு மாற்று ஊடகம், அந்த மாற்று ஊடகத்தின் வழியாக நண்பர் ஒரிசா பாலு என்பவருடைய அந்த நெட்வொர்கிங் மூலமாக இவ்வளவு தமிழர்களை நாம் இங்கு கூட்டுவிக்க முடியும் என்றால், இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும், நன்றி வணக்கம்! •

## ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வு முறை மாற்றம்

சிவில் சர்வீஸ் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப் படையில் இளைஞர்களை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., உள்ளிட்ட பலவேறு அகில இந்திய பணிகளுக்கு நியமிக்கும் முறை யையும் அதன் அடிப்படையில் அவர்கள் பணியாற்றும் மாநில ஒதுக்கீடுகளையும் ரத்து செய்துவிட்டு, முசோரியில் நூறு நாள் பயிற்சியில் இருக்கும்போது எடுக்கும் மதிப் பெண்கள் அடிப்படையில், எந்தப் பணிக்கு ஒருவரை தேர்வு செய்வது என்பதையும் எந்த மாநிலத்தில் பணியாற்ற அவருக்கு ஒதுக்கீடு வழங்குவது என்பதையும் முடிவு செய்ய வேண்டும் என்று பிரதமர் அலுவலகம் விரும்புகிறது என, மத்திய பணியாளர் சீர்திருத்தத்துறையின் இணைச் செயலா ளர் விஜய்குமார் சிங் அறிவித்திருப்பது அரசியல் சட்டம் அளித்துள்ள சமூக நீதியை தட்டிப் பறிக்கும் செயலாகும்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளை யு.பி.எஸ்.சி. நடத்தி வருகிறது. யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வில் பெறும் மதிப் பெண்களைக் கொண்டே ஒருவருக்கு ஐ.ஏ.எஸ்., உள்ளிட்ட பணிகள் ஒதுக்கப்படுகின்றன.

அதன்பின்னர் பயிற்சி அளிக்கும் நோக்கோடு 'பவுண்டேசன் கோர்ஸ்' உள்ளது. ஆனால், இனிமேல் முதன் மைத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் அதன் பிறகு பவுண் டேசன் கோர்ஸ் முடிக்க வேண்டும் என்றும் முதன்மைத் தேர்வு மற்றும் பவுண்டேசன் கோர்சில் பெறுகிற மதிப்பெண்களைக் கூட்டி அதன் அடிப்படையிலேயே பணிய மர்த்தம் செய்ய வேண்டும் என்று மோடி அரசு முடி வெடுத் துள்ளது என்று கூறப்படுகிறது.

# கிறித்தவர் கட்டிக்கொடுத்த மசூதி



துபாயில் வசிக்கும் கிறித்தவரான சஜி செரியன், அங்கு தங்கி வேலை பார்க்கும் முஸ்லிம் தொழிலாளர் களுக்காக மசூதி ஒன்றை கட்டிக் கொடுத்துள்ளார். அந்த மசூதி புஜாய்ரா அருகில் உள்ள அல் ஹயில் தொழிற்பேட்டையில் அமைந்துள்ளது. அந்தப் பகுதி யில் வேலை பார்ப்பவர்கள் தொழுகைக்காக தூரத்தில் உள்ள மசூதிகளுக்கு செல்ல வேண்டியிருந் திருக்கிறது. அதைக் கவனித்த சஜி செரியன், தனது சொந்தச் செலவில் மசூதி கட்டிவிட்டார். இவர் கேரள மாநிலத்திலுள்ள காயம்குளம் பகுதியைச் சேர்ந்தவர். 2003ஆம் ஆண்டு துபாய் சென்றவர், அங்கு பல்வேறு தொழில் நிறுவனங்களை நிர்வகித்து வருகிறார்.

“இங்கு வேலை பார்ப்பவர்கள் தொழுகைக்கு பணம் செலவழித்து காரில் செல்வதைப் பார்த்திருக் கிறேன். அவர்கள் தங்கியிருக்கும் பகுதியிலேயே மசூதியை உருவாக்கினால் அது அவர்களுக்கு சவுகரிய மாகவும், மகிழ்ச்சியாகவும், இருக்கும் என்று நினைத்தேன். நான் மசூதி கட்டுவது பற்றிய தகவல் அறிந்து நிறைய பேர் பண உதவி செய்யவும், கட்டு மானப் பொருட்கள் வழங்கவும் முன் வந்தனர். என் சொந்தப் பணத்தில் இருந்துதான் கட்டவேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததால் அன்பாக மறுத்துவிட்டேன்.

கிறித்தவனான நான் மசூதி கட்டும் தகவல் அறிந்து அதிகாரிகள் ஆச்சரியப்பட்டார்கள். குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு, போன்ற வசதிகளை செய்து தர முன்வந்தார்கள்“ என்கிறார்.

இந்த மசூதியில் ஒரே நேரத்தில் 250 பேர் தொழுகை நடத்த முடியும். மசூதியில் உள்ள முற்றத்தில் 700 பேர் தொழுகை நடத்தவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஓராண்டாக நடந்துவந்த கட்டுமான பணிகள் தற்போது நிறைவடைந்து இருக்கிறது.

**சைதை. சு. மணிமாறன்**

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட்டுக்காக கொலை செய்த போலீசின் வன்மம் தொடர்கிறது. ஸ்டெர் லைட்டுக்கு எதிராக ஒட்டுமொத்த தூத்துக்குடி மக்களும் ஒற்றை மனிதனாக எழுந்து நின்று தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார்கள். இதன் காரணமாகவே கண்ணில்படுவோர் அனைவரையும் காட்டு மிராண்டித்தனமாகவும் கொலை வெறியோ டும் தாக்குதல் நடத்தி தனது விசுவாசத்தை வேதாந்தா குழுமத்திற்கு சமர்ப்பித்திருக்கிறது காவல்துறை.

இதன் ஒரு பகுதியே, மே 22 தொடங்கி தொடர்ச்சியாக நடைபெற்று வந்த கைதுகள், தெருவில் வருவோர் போவோரையெல்லாம் அதிலும் குறிப்பாக இளைஞர்களையும் சிறார்களையும் கண்ட இடத்திலேயே அடித்துக் குதறி துவம்சம் செய்து வண்டியிலேற்றி ஆங்காங்கே இருக்கும் காவல் நிலையங்களில் அள்ளிப்போட்டுவிட்டு சென்று விட்டது காவல்துறை, அப்பா, அம்மா, மகன், மனைவி என்று பலரும் தங்கள் சொந்தங்களைக் காணாமல், காவல்நிலையங்களுக்கும் போக முடியாமல் கண்ணில் படுவோரிடமும் காணாத கடவுளிடமும் வேண்டிக் கொள்வதும் இறைஞ்சுவதும் சாபமிடுவதுமாக உழன்று கொண்டிருந்தார்கள்.

மார்க்சிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்டக்குழு அலுவலகத்தில் மட்டும் 20க்கும் மேற்பட்டோர் முறையீடு செய்தார்கள். இதுபற்றி காவல்துறையி னரிடம் செய்த முறையீடுகள் அனைத்தும் கருங்கல் பாறையில் பட்ட ஒலி போல் திரும்பி வந்தது. இந்த நிலைமையில்தான் தூத்துக்குடி வழக்கறிஞர்கள் சங்கம் மெச்சத்தக்க பணியினை மேற்கொண்டது.

அந்த வழக்கறிஞர்களில் ஒருவர் இ.சுப்புமுத்து ராமலிங்கம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் பி.இசக்கிமுத்துவின் மகன். இவர் உள்பட வழக்கறிஞர்கள் அனைவரும் இணைந்து தூத்துக்குடி மாவட்ட தலைமை நீதிபதி யிடம் முறையிட்டிருக்கிறார்கள். எண்ணற்ற அப்பாவி இளைஞர்களைக் காணவில்லை. சட்ட விரோமாக கைது செய்திருக்கிறார்கள் என்று தெரிவித் திருக்கிறார்கள்.

மாவட்ட நீதிபதி, விளாத்திகுளம் நீதித்துறை நடுவர் அவர்களை, வழக்கறிஞர்கள் குறிப்பிட்டுச் சொன்ன தூத்துக்குடி புதுக்கோட்டை காவல் நிலை யத்தை ஆய்வு செய்ய உத்தரவிட்டிருக்கிறார். எப்படியோ கருப்பு ஆடுகள் இதைப் புரிந்து கொண்டு புதுக்கோட்டை காவல்நிலையத்துக்கு இந்த தகவலை

# தூத்துக்குடி வழக்கறிஞர்களுக்கும் நீதிபதிகளுக்கும் ஒரு சல்யூட்!



சொல்லிவிட்டார்கள். புதுக்கோட்டை காவல்நிலையத்திற்கு விளாத்திகுளம் மேஜிஸ்திரேட் சென்றபோது அங்கு யாரும் அடைக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால், அவர் சந்தேகப்பட்டு விபரங்களை சேகரித்தபோது வல்லநாடு மலைக்கருகே காட்டுக்குள் அமைந்திருக்கும் துப்பாக்கி சுடுதளத்திற்குள் ஏராள மான இளைஞர்கள் அடைத்து வைக்கப்பட்டிருப்பதை கண்டறிந்து அங்கு சென்றிருக்கிறார். 96 பேர் மந்தைகளைப் போல காயங்களோடு, அடுக்கி வைக்கப் பட்ட உடல்கள் போன்று சிறை வைக்கப்பட்டிருப் பதைக் கண்டிருக்கிறார். இதன்பிறகு சிறார்களாக இருந்த 35 பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மீதி இருந்த 61 பேர் வழக்கு பதியப்பட்டு சட்டப் படியான காவலுக்கு மாற்றப்பட்டுள்ளனர். பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, ஒவ்வொருவரின் உடம்பிலிருந்த காயங்களை பதிவு செய்து அதன்பின் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டுள்ளனர். அதன் பிறகும் வழக்கறிஞர்கள் சங்கம் சும்மா இருக்கவில்லை. கிட்டத்தட்ட அனைவரும் அப்பாவிகள். அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்போடு செயல்பட்டது. அவர்களை பிணையில் விட வேண்டுமென்று கோரிக்கை வைத்தது.

நீதிமன்றங்களுக்கு விடுமுறைக் காலம். எனவே, குறிப்பிட்ட தினங்களில் மட்டுமே பிணைக்கான மனுக்கள் விசாரிக்கப்படுவது வழக்கம். ஆனால், மாவட்ட தலைமை நீதிபதி உயர்நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று பிணைக் கோரிக்கைகைகளை பரிசீலிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். இதையடுத்து அனைவரும் சொந்த ஜாமீனில் விடுதலை செய்யப் பட்டனர். அதேநேரத்தில் இந்தக் கொடுமை களை கண்ணுற்ற மாவட்ட தலைமை நீதிபதி நீதிமன்றத்தின் அருகே உள்ள தென்பாகம் காவல்நிலையத்தை ஆய்வு செய்திருக்கிறார்.

அங்கும் ஜட்டியோடு மட்டும் நிற்க வைக்கப் பட்டிருந்த காயங்களோடு இருந்த பலரையும் பார்த்து, அது சட்டவிரோதக் காவல், ஒன்று அவர்களை விடுவிக்க வேண்டும் அல்லது நீதிமன்றக் காவலுக்கு கொண்டுசெல்ல வேண்டுமென்று போலீசாருக்கு அறிவுறுத்தியிருக்கிறார். இதையடுதது அவர்களும் நீதிமன்றக் காவலுக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டார்கள்.

ஆனால், காவல்துறையின் வன்மம் ஓய்ந்த பாடில்லை. மே 25 (வியாழனன்று) சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக் கிளையில் தூத்துக்குடி காவல் துறை செல்வநாகரத்தினம் ஐபிஎஸ் மேற்பார்வையில், சட்டவிரோதமாக அடைக்கப்பட்டவர்களுக்கு மாவட்ட நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணையை ரத்து செய்ய வேண்டுமென்று முறையீடு செய்திருக் கிறது. அதை விசாரித்த நீதிபதி மனுவை தள்ளுபடி செய்துவிட்டார். ஆனால், போலீஸ் வன்மம் அத்துணை எளிதில் ஓய்ந்துவிடுமா என்ன? செல்வ நாகரத்தினம் உடனடியாக அதையும் மேல்முறையீடு செய்கிறார். அங்கும் அது நிராகரிக்கப்பட்டுவிட்டது. ஆயினும் மீண்டும் திங்கள்கிழமை இந்த மேல் முறையீட்டை செய்ய வேண்டுமென்று மேற்படி செல்வ நாகரத்தினம் வழிகாட்டியிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு பொதுப் பிரச்சனையில் சமூக நோக்கில் நடைபெற்ற போராட்டத்துக்குப் பிந்தைய காலத்தில் 13 படுகொலைகள், அதன் காரணமாக தூத்துக்குடி நகரம் முழுவதும் கவலையிலும், சோகத்திலும் ஆழ்ந்திருக்கிறது. இந்த நிலையில் கூட, ஒவ்வொரு குழந்தையின் உணர்விலும் குடும்பத்தின் உணர்விலும் போராட்டத்திற்கு ஆதரவாக இருக்கக்கூடாது என கங்கணம் கட்டிக்கொண்டு, காவல்துறை வன்மத்தோடு இயங்குகிறது. ஆனால், மாறாக ஒவ்வொரு குழந்தை யும், ஒவ்வொரு குடும்பமும் எல்லா வேறுபாடுகளையும் கடந்து ஸ்டெர்லைட் மூடப்பட வேண்டும் என்ற உறுதியையும், காவல்துறை மக்களின் நண்பனல்ல, ஆளும் வர்க்கத்தின் அடியாள் என்பதையும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆம், காவல்துறைதான் தூத்துக்குடி நகரத்தை போராளிகளின் மகத்தான நகரமாக ஒட்டுமொத்த மக்களையும் போர்க்குணம் கொண்டவர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறது. ஸ்டெர்லைட் முதலாளி அனில் அகர்வால் சொந்த அடியாள் படை வைத் திருந்தால் கூட இந்த அளவு வன்மத்தோடு செயல் படுமா என்பது சந்தேகமே? இத்தகைய சூழலில், தூத்துக்குடி வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் தூத்துக் குடி நீதித்துறையின் செயல்பாடு மிகுந்த போற்று தலுக்கும் பாராட்டுக்கும் உரியது. அரசு நிர்வாகத்தின் அத்தனை அடுக்கும் பணத்திற்கு சேவை செய்வதாக மாறிவிட்ட நிலையில், ஒரு நம்பிக்கைக் கீற்றாக நீதித் துறையின் இந்த நடவடிக்கை திகழ்கிறது. அவர்கள் அனைவருக்கும் நமது போற்றுதலும் வணக்கங்களும்!

ஸ்டெர்லைட்டை மூடு என்ற தீர்ப்பை வழங்கிய நீதியரசர்கள் எலிப்பி தர்மாராவ் மற்றும் பால் வசந்த குமார், அந்த தீர்ப்புக்கு பின்னர் எந்த பதவி உயர்வும் இல்லாமலேயே ஓய்வு பெற்ற சூழலில், நாம் வாழ்கி றோம் என்பதோடு ஒப்பிட்டால் இந்தப் பாராட்டு மிகவும் சிறியது என்பது புரிகிறது.

**க. கனகராஜ்**
மாநில செயற்குழு உறுப்பினர்,
சி.பி.ஐ.(எம்)

சட்டசபையில் முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி 110 விதியின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அப்போது அவர் பேசியதாவது:

ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் தினம். சமுதாயம் நலமாக வாழவும், வளமுள்ள நாடு உருவாகவும் இன்றியமையாததாக விளங்குவது சுற்றுச்சூழல். மறைந்த ஜெயலலிதா பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஆய்வு செய்யும் வல்லுனர் குழு என்ற சிறப்பு குழுவினை அமைத்தார். இந்த வல்லுனர் குழு, ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய மக்காத பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள் போன்ற பொருட்களை தடை செய்யவும், பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் வாழை இலைகள், பாக்குமட்டை தட்டுகள், தாமரை இலைகள் போன்றவற்றின் பயன்பாட்டினை ஊக்குவிக்கவும் ஆலோசனை வழங்கியது.

அன்றாடம் மக்களுக்கு தேவைப்படும் பால், தயிர், எண்ணெய், மருத்துவப் பொருட்களுக்கான பிளாஸ்டிக் உறைகளுக்கு மட்டும் விலக்கு அளிக்க பரிந்துரைத்துள்ளது. ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும். பிளாஸ்டிக் பொருட்கள், நிலங்களில் தேங்கிவிடும்போது, நீர்நிலைகளை நோக்கிச் செல்லும் நீரின் போக்கு மாறி, நீர் தேங்கி விடும் நிலை உருவாகிறது. மேலும், கழிவுநீர் செல்லும் பாதைகளிலும் இதன் பாதிப்புகள் அதிக அளவில் உள்ளது. இதனால் தண்ணீர் மாசடைகிறது. மேலும் மழைநீர், பூமியில் கசிந்து நிலத்தடியினை அடையாமல் போவதால், நிலத்தடி நீர் மட்டம் உயர்வதும் பாதிக்கப்படுகிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தேங்கி இருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளில் மழை நீர் தேங்கும் போது, கொசு உற்பத்தியாகி, அதன் மூலம் மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவுகின்றன. மேலும், மழைநீர் கால்வாய்களில் அடைப்புகள் ஏற்பட்டு, வெள்ளப்பெருக்கு ஏற்படவும் காரணமாகிவிடுகிறது. மண்வளமும் பாதிக்கப்படுகிறது.

# முதலமைச்சர் பார்வை மக்கள் பக்கம் திரும்புகிறதா?



தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் எரிக்கப்படும்போது, அதன் மூலம் வெளியாகும் நச்சு வாயுவின் மூலமாக மனிதன் மற்றும் உயிரினங்கள் சுவாசிக்கும் காற்றும் மாசடைகிறது. உணவு பொருட்களுடன் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் பிற உணவுகளுடன் சேர்ந்து உண்ணும் நிலை ஏற்படுவதனால், கால்நடைகள் மற்றும் வன விலங்குகளின் உயிரிழப்புக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் காரணமாகி விடுகின்றன.

மேலும், பிளாஸ்டிக் பொருட்கள், பல ஆண்டுகள் ஆனாலும் மக்காத தன்மை உடையதால், அவற்றை அழிப்பதோ, ஒழிப்பதோ இயலாத காரியம், இவ்வாறு நிலம், நீர், காற்று போன்ற பல்வேறு நிலையில் மாசு ஏற்பட்டு, மனித உயிருக்கும், சுகாதாரத்திற்கும் பிளாஸ்டிக் பொருட்கள் பெரும் தீங்கு விளைவிக்க காரணமாகி விடுகிறது. எனவே இவற்றை அறவே தவிர்ப்பது இன்றைய சூழ்நிலையில் கட்டாயமாகிறது.

மேற்படி பாதிப்புகளை கருத்தில் கொண்டும், இந்தத் தீங்கினை நம் எதிர்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச்செல்லக்கூடாது என்ற உயரிய நோக்கத்திலும், தமிழ்நாட்டில் 2019ஆம் ஆண்டு, ஜனவரி ஒன்று முதல் பால், தயிர், எண்ணெய், மருத்துவ பொருட்களுக்கான உறைகள் தவிர, தடிமன் வேறு பாடின்றி, இதர மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் தேநீர், தண்ணீர்க் குவளைகள், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் கொடிகள் உள்ளிட்ட பொருட்களை தயாரித்தல், விற்பனை செய்தல், சேமித்து வைத்தல், பயன்படுத்துதல் ஆகியவற்றை சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 ன் கீழ் தடை செய்ய இந்த அரசு முடிவு செய்து, தமிழ்நாடு முழுவதும் தடை செய்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்களும், வியாபாரிகளும் மேற்படி பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக, துணிப்பைகள், காகித உறைகள் போன்ற மக்கும் பொருட்களை பயன்படுத்த பழகிக்கொள்ள ஏதுவாக, மேற்படி தடைகளை உடனடியாக அமல்படுத்தாமல், 2019 ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி முதல் அமல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

ஜெயலலிதாவின் தொலைநோக்குத் திட்டமான மழைநீர் சேகரிப்புத்திட்டம் பொது மக்களின் ஒத்துழைப்போடும், பங்களிப்போடும், வெற்றிகரமாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு, நிலத்தடி நீர் பெரிய அளவில் சேமிக்கப்பட்டது. அதே போன்று, உலக சுற்றுச்சூழல் தினத்தில் அனைவரின் ஒத்துழைப்போடும், பங்களிப்போடும், பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாட்டை நம் எதிர்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம் என்றார்.



## பிரான்ஸ் அதிபர் மேக்ரானின் நற்குணம்

மாலி நாட்டைச் சார்ந்தவர் முஹம்மது கசாமா (வயது 22). இவர் வேலை தேடி, பிழைப்புக்காக பிரான்ஸ் நாட்டிற்கு வந்திருந்தார்.

பிரான்ஸ் வடக்கு வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் நான்காவது மாடியின் பால்கனியின் வெளியே 4 வயது குழந்தை ஒன்று தொங்கிய நிலையில் அழுது கொண்டிருந்தது. அக்குழந்தையை கீழே விழாமல் அண்டை வீட்டுக்காரர் பிடித்துக் கொண்டிருந்தார்.

இதனை கண்டு திடுக்கிட்ட முஹம்மது கசாமா, வேடிக்கை பார்த்துக்கொண்டும், செல்பி எடுத்துக் கொண்டும் இருந்த மக்களை தள்ளிவிட்டு மாடியின் முன்சுவர் வழியே ஸ்பைடர் மேன் பாணியில் பயமின்றி ஏறினார். தனது உயிரை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் குழந்தையைக் காப்பாற்ற சிரமப்பட்டு சுவரில் ஏறி, காப்பாற்றி பத்திரமாக வீட்டுக்குள்ளே தள்ளினார்.

இதனை படம் பிடித்த ஒருவர் சமூக வலைதளங்களில் போடவே அது முகநூலில் ட்ரெண்ட் ஆகி முஹம்மதுவிற்கு பிரான்ஸ் மக்களிடையே பாராட்டுகள் குவிந்தன.

இந்த நிலையில் பிரான்ஸ் அதிபர் மேக்ரான் அவர்கள் “குழந்தையைக் காப்பாற்றிய முஹம்மது எனும் இளைஞனுக்கு நம் நாட்டின் நிரந்தர குடியுரிமை வழங்கப்படும்! அவருக்கு வீரதீரச் செயல் விருது வழங்கப்படும்! மேலும், தீயழிப்புத் துறை பிரிவில் உயர் பணியில் அமர்த்தப்படுவார்” என கூறியுள்ளார்.

**ஞானமணி**

சிகிச்சை பெற்று வருபவர்களில் ஓர் இளைஞர் ரஜினியைப் பார்த்து, "யார் நீங்க?" என்று அந்த வீடியோவில் கேட்கிறார். அதற்கு ரஜினியோ, "நான் ரஜினிகாந்த்" என்று சொல்கிறார். "ரஜினிகாந்த் என்பது தெரிகிறது, எங்கேயிருந்து வருகிறீர்கள்?" என அந்த இளைஞர் மீண்டும் கேட்கிறார். அதற்கு நடிகர் ரஜினி காந்த், "நான் சென்னையிலிருந்து வருகிறேன்" என்று சொன்னதும், "சென்னையிலிருந்து வருவதற்கு நூறு நாள் ஆகுமா?" என அந்த இளைஞர் கேட்க, ரஜினி மிகவும் இறுக்கமான முகத்துடன் சிரித்தபடியே அந்த இடத்தை விட்டு நகர்ந்து செல்கிறார்.

அந்த இளைஞருடைய பெயர் சந்தோஷ் என்பதும், "அனைத்துக் கல்லூரி மாணவர்கள் கூட்டமைப்பின் தூத்துக்குடி ஒருங்கிணைப்பாளர்" என்பதும் தெரிய வந்தது. போலீஸாரின் தாக்குதலில் பலத்தக் காய மடைந்து தலையில் பத்துத் தையல்கள் போடப்பட்டு அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

"தூத்துக்குடியில் நாங்கள் நூறு நாள்களாகப் போராடினோம். அப்போதெல்லாம் நடிகர் ரஜினிகாந்த் எங்களைச் சந்திக்கவோ, போராட்டத் துக்கு ஆதரவு தெரிவிக்கவோ வரவில்லை. போலீ ஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பலர் உயிரிழந்தனர். பலர் மரணத் தருவாயில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் நடந்து இன்றோடு எட்டு நாள்கள் ஆகின்றன. இத்தனை நாள்களாக, இந்தச் சம்பவம் பற்றி ரஜினிகாந்த் வாய்திறக்கவில்லை. பாதிப்புக்குள்ளானவர்களை வந்து சந்திக்கவும் இல்லை. இன்று எதற்காக வருகிறார்? அதுவும் ஸ்டெர்லைட் ஆலை சீல் வைக்கப்பட்ட இன்று எதற்காக வந்துள்ளார். ஸ்டெர்லைட் ஆலையை மூடவில்லை என்றால் ஒருவேளை அவர் வந்திருக்க மாட்டார். தற்போது அவர் வந்ததன் பின்னணியில் மிகப்பெரிய காரணம் இருக்கிறது. இன்னும், சில தினங்களில் காலா படம் ரிலீஸ் ஆக விருக்கிறது. இனியும் மக்களைப் போய்ச் சந்திக்க வில்லை என்றால் அவருடைய படம் தமிழகத்தில் ஓடாது என்று அவருக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் தூத்துக்குடிக்கு வந்து எங்களைச் சந்தித்து நிதி உதவி வழங்குகிறேன் என்று சொல்லி யிருக்கிறார். அதனால் தான் எனக்குக் கோபம் வந்து, அவரை அப்படிக் கேட்டேன். எங்களால் எப்படிப் போராடி வெற்றி பெறத் தெரிந்ததோ. அதுபோல எங்களைப் பாது காத்துக்கொள்ளவும் எங்களுக்குத் தெரியும்" என்றார் சந்தோஷ்.

"சில சமூக விரோதிகளால்தான் கலவரம் ஏற்பட் டது" என ரஜினி பேட்டியளித்திருப்பது பற்றிச் சந்தோஷிடம் கேட்டபோது "நாங்கள் சமூக விரோதிகள் என்பதை இவர் பார்த்தாரா அல்லது போராட்டத்தில் சமூக விரோதிகள் கலந்து கொண்டார்கள் என்பதை ரஜினி தனது ஏழாவது அறிவை வைத்து உணர்ந்தாரா? நூறு நாள் போராட் டத்தில் ஒரு நாளாவது எங்களுடன் இணைந்து போராடியிருந்தால்தான் அவருக்குக் கருத்துச் சொல்ல தகுதி உண்டு. எனவே, எங்களைப் பற்றிப் பேச ரஜினிக்கு எந்தத் தகுதியும் கிடையாது" என்றார் ஆவேசமாக.

# யார் நீங்க?



# சித்த மருத்துவக் குறிப்புகள்

அன்பிற்குரிய வாசகர்களே!

வாழ்த்தும் வணக்கமும்.

ஆரோக்கியமான நலமான வாழ்வினோடு உயிர் வாழ என் சித்த மருத்துவக் குறிப்புகள் உங்களுக்குப் பெரிதும் துணையாக இருக்கும் என்று இவ்விதழின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோய் என்றால் என்ன? சுருக்கமாகச் சொன்னால் “சீராக இயங்கும் நமது உடல் உறுப்புகள் மாறுபட்டு இயங்குவதே“ நோய் என்பதாகும். நமது உடல் சீராக இயங்க நாம் என்ன செய்ய வேண்டும்.

ஐயன் திருவள்ளுவப் பெருந்தகையனார் தமது திருக்குறளில்,

“மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்

வளிமுதலாய் எண்ணிய மூன்று“

அதாவது வளி என்ற வாய்வு (வாதம்) முதலாகக் கொண்ட நமது உடலில் வாதம், பித்தம், கபம் மூன்றின் அளவு கூடினாலும் இருக்க வேண்டிய அளவு குறைந்தாலும் நோய் உண்டாகும் என்று அழகாகக் கூறியுள்ளார்.

ஆக, நமது உடல் நன்கு சீராக இயங்க வேண்டு மென்றால் அகத்திய பெருமான் கூறியுள்ளபடி, “காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் ஆகியவற்றை ஒரு மண்டலம் உண்டு வந்தால் கோலூண்றும் கிழவனும் கோல்வீசி குழவி உலா வருவரே“ என்று அழகாகக் கூறியுள்ளார்.

அதாவது காலையில் இஞ்சி சாப்பிட்டால் நமது உடலில் உள்ள அதிகப்படியான பித்தத்தைக் குறைக்கும் ஆற்றல் பெற்றது. எப்படி இஞ்சியைச் சேர்க்க வேண்டும்? இஞ்சியின் தோலை (இஞ்சியின் நஞ்சு அதன் தோலில்) நன்கு நீக்கி சுத்தம் செய்து உலர்ந்த பின் சிறு சிறு துண்டுகளாக்கி தேனில் ஊறவைத்து தினமும் காலை வெறும் வயிற்றில் ஒன்று அல்லது இரண்டு துண்டுகள் சாப்பிட்டு வர வேண்டும்.

அடுத்து சுக்கை நன்கு தோல் நீக்கி சுத்தம் செய்து சுண்ணாம்பில் ஊற வைத்து, சூடேற்றி உலர வைத்து சுத்தப்படுத்தி, நன்கு அரைத்து பொடியாக்கி, மதியம் உணவு சாப்பிடும் முன்பு சோற்றில் ஒரு தேக்கரண்டி சேர்த்து, நெய் அல்லது நல்லெண்ணை விட்டுப் பிசைந்து சாப்பிட்டு வந்தால் செரிமான பிரச்சினைகள் மற்றும் தேவையற்ற கெட்ட வாயுவை வெளியேற்றி உடல் சீர்படும்.

மாலையில் கடுக்காயை அரிசி கழுவும் கலனியில் மூன்று நாட்கள் ஊறவைத்து, காயவைத்து அதன் கொட்டையை நீக்கி தோலை மட்டும் எடுத்து பொடியாக்கி தினமும் மாலை ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் நீங்கும். மேலும், குடலில் தேங்கியிருக்கும் கழிவுகள் நோயை உண்டு பண்ணும் கிருமிகள் யாவும் வெளியேறும். இம்முறையில் கடுக்காயை சாப்பிட்டு வர கேன்சர் கிருமிகளும் கூட வெளியேறும்.

வாழ்க வளமுடன்.

மருத்துவர். திரு. **சி. இராஜா சாக்ரட்டீஸ்,**

திருவையாறு.






# தொடங்கிவிட்டது தமிழ்நாட்டில் இனப்படுகொலை...

தொடங்கிவிட்டது
தமிழ்நாட்டில்
இனப்படுகொலை..

தூத்துக்குடியை
துவக்கால் துவைத்ததே
இனப்படுகொலையின்
தொடக்கம்!

ஜெனரல் டயரின்
தோட்டாக்களை
ஜார்ஜ்கோட்டையிலிருந்து
அனில் அகர்வால்
அடியாட்கள் ஏவுகிறார்கள்!

ஆலையை மூட
போராடியவர்களை
ஆளயே முடித்துவிட முடிவெடுத்தது
அரச பயங்கரவாதம்!

சுட்டுவிரல் நீட்டி
சுடச் சொல்லி சொடக்கியது
இந்திய ஓநாய்கள்!

எதிர்கால சந்ததி
உயிர் வாழ
முழக்கமிட்டோரை
எதிர் நின்று உயிர்பறிக்க
வச்சிராவில் வந்தது
காவலர்கள் இல்லை...
இரத்தக் காட்டேறிகள்!

திட்டமிட்டு
சுட்டுவீழ்த்த கட்டளையிட்ட
கருங்காலிகளை விட்டுவிடாது
இன உணர்ச்சி!

எட்டப்பர்களாய் திரியும்
கறைவேட்டிகளை
காரி உமிழ்ந்து
அம்மணமாக்கிவிட்டது
நிகழ்காலம்!

உயிரைக்கொடுத்தேனும்
ஆலையை மூடுவோம்
முழங்கிய மக்கள்!
உயிரையே கொடுத்துவிட்டார்கள்!

இரத்தப் பிசுபிசுப்போடு நின்று
கதறுகிற எம்மக்களின் குரல்
ஸ்டெர்லைட் ஆலையை
சில்லுசில்லாக சிதைக்கும்!

திரேஸ்புரத்தில்
பற்றி எரியும் பெருநெருப்பு
அதிகார அரம்பர்களை
அடியோடு பொசுக்கும்!

தொடங்கியது தமிழ்நாட்டில்
இனப்படுகொலை...
அடுத்தடுத்த ஆட்டத்திற்கும்
குறிபார்த்து நாள் குறிக்கிறது
இந்தியா!

ஸ்டெர்லைட்டால்
அணு உலையால்
புற்றுநோய் கொடுத்து..
மீத்தேனால்
ஹைட்ரோ கார்பனால்
நிலம், நீர், காற்றைக் கொடுத்து
நியூட்ரினோவால்
சாகர் மாலாவால்
சமாதி எழுப்பி
உயிர்க்குடிக்கும்
ஒத்திகைக்கு
அணிவகுத்து வருகிறது
பாரதமாதா படைகள்!

சாவையும் சவாலையும்
எதிர்கொள்வோம்!
நாளையும்
சனநாயகம்
செத்துக்கிடக்கலாம்

ஆனால்
இனப்படுகொலையில்
உயிர்த்தெழும்!
இன விடுதலை...

– கவிபாஸ்கர்



மிகப்பெரிய கொடுமை. முத்துக் குளித்தலுக்கு உலகப்புகழ் பெற்ற தூத்துக்குடி மக்களை இரத்தக் குளியலுக்கு உள்ளாக்கியிருக்கிறது அரச பயங்கர வாதம். கூட்டத்தைக் கலைக்க எடுக்கப்பட வேண்டிய எத்தனையோ முறைகள் இருக்கிறது. அத்தனையையும் புறந்தள்ளிவிட்டு, குடிமக்களை கொன்றே ஆகவேண்டும், இந்தக் கொலைகளால் ஆர்ப்பாட்டம், போராட்டம் போன்ற அறவழி நிகழ்வுகள் நடக்கக்கூடாது, இந்திய மேலாதிக்கத்தின் எதேச்சதிகார தமிழ்மண் அழிப்பு வேலைகளுக்கு தடை வந்துவிடக் கூடாது என்ற நோக்கத்திலேதான் இப்பெரிய கொலை நிகழ்வை அரங்கேற்றியிருக்கின்றன ஆளும் அரசுகள்.


பெண்களையும் சேர்த்து, துப்பாக்கிக்கு இரையாக்கி இருப்பது மிக மிக மோசமான, ஏற்றுக் கொள்ள இயலாத செயல். சுட்டவர்களையும் சுடச் செய்தவர்களையும் நடுத் தெருவிற்கு கொண்டு வர வேண்டும். நீங்கள் மனிதப் பிறவிகள்தானா என்று போவோர் வருவோர் துப்ப வேண்டும். அவர்களுக்கான தண்டனையை தூத்துக்குடி பொதுமக்களே கொடுக்க வேண்டும்.

இதற்கெல்லாம் காரணமான ஸ்டெர்லைட் அழிவு ஆலையை தரைமட்டமாக்கி, துப்பாக்கிச்சூட்டில் கொலையுண்டவர்களுக்கு அங்கே நினைவில்லம் கட்டப்பட வேண்டும். இனிமேலும் தமிழ்மண், வந்தேறிகளையும் எதேச்சதிகாரத்தையும் தாங்கிக் கொள்ள முடியாது. யார் யாருக்கோ பொருளாதாரத்தைக் கொடுத்துவிட்டு தன்னை அழித்துக் கொண்டிருக்க முடியாது. தீர்வு வேண் டும். அல்லது தமிழர்களாகிய நாம் தீர்ப்பெழுதுவோம்.

**இருங்கோவேள்**

## முதன்முதலாக மலேசியாவில் இந்தியருக்கு அட்டார்னி ஜெனரல் பதவி

*மலேசியா தனி நாடாக உருவாகி, 55 ஆண்டுகளில் இதுவரை அங்கு ஒரு இந்தியர் கூட அட்டார்னி ஜெனரல் பதவி வகித்தது இல்லை. இந்த நிலையில் முதல்முறையாக இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட டாமி தாமஸ் அந்தப் பதவியில் நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.*



*இரண்டு வாரங்களுக்கு முன் புதிய பிரதமர் மகாதீர் முகமது, டாமி தாமசை அட்டார்னி ஜெனரலாக நியமிக்க பரிந்துரை செய்து உள்ளார் என்ற தகவல்கள் வெளியானபோது, அங்கு மூன்றில் இரு பங்கு மக்கள் தொகையை கொண்ட மலாய் சமூகத்தினர். முஸ்லிம் ஒருவரைத்தான் அந்தப் பதவியில் அமர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.*

*ஆனால் டாமி தாமசை அட்டார்னி ஜெனரலாக நியமிக்க மன்னர் ஐந்தாம் சுல்தான் முகமது தனது ஒப்புதலை வழங்கி விட்டார்.*

*இது தொடர்பாக மலேசிய அரண்மனை விடுத்து உள்ள அறிக்கையில், “தாமஸ் நியமனம், மத, இனமோதல்களை உருவாக்காது, மலேசிய மக்கள் இனம், மதம் கடந்து நடந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும்“ என்று கூறப்பட்டு உள்ளது.*

*டாமி தாமஸ், மலேசியாவின் மிகச் சிறந்த வக்கீல்களில் ஒருவர். 40 ஆண்டுகளுக்கு மேல் சட்டத்துறையில் அனுபவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*அவர் பொறுப்பு ஏற்றதும், முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் தொடர்புடைய ஊழல் வழக்கின் விசாரணையை விரைவுபடுத்துவார் என்று தகவல்கள் கூறுகின்றன.*

**வை**கை ஆற்று தண்ணீர் பல ஆயிரம் வருடங்களாக தேனி மதுரை சிவகங்கை பரமக்குடி ஆர்.எஸ்.மங்கலம் வழியாக சனவேலி போய் கடலில் கலந்து கடல் வாழ் உயிரின பெருக்கத்துக்கு உதவியாக இருந்து வந்தது. அந்தத் தண்ணீர் கடந்த 15 ஆண்டுகளாக வரவில்லை. ஏன்? எப்பொழுதும் உற்பத்தி ஆகும்? நீர் மலையில் உற்பத்தி ஆகிறது. அந்த நீர் எங்கே போனது? நீர் வராததற்கு காரணம் என்ன?

ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பே நீர் மேலாண்மையில் சிறந்தவர்களாக பாண்டியர்கள் விளங்கினார்கள்.

தமிழகத்தின் வறட்சியைப் போக்க நதிகளை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக எழுந்துள்ள நிலையில் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பே அதனை செயல்படுத்தி வறண்டு கிடந்த பல ஆயிரம் ஏக்கர் நிலங்களை விளை நிலங்களாக மாற்றியுள்ளனர் பாண்டிய மன்னர்கள்.

ஐவகை நிலங்களில் முல்லை, நெய்தல் நிலங்களாக இருந்த பழைய ராமநாதபுரம் மாவட்டத்தின் பல பகுதிகளில் முற்காலப்பாண்டியர்கள் காலத்தில் மருத நிலமாக மாற்றப்பட்டு, உழவுத்தொழில் பெருக எல்லா கிராமங்களிலும் கண்மாய்கள், குளம், குட்டைகள், ஏந்தல்கள் போன்ற நீர் சேகரிப்பு அமைப்புகளை நிறுவி, மழைநீர், ஆற்றுநீர், என கிடைக்கும் அத்தனை நீரையும் சேகரிக்கும் திட்டங்களை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டு, செயல்படுத்தி நீர் வளம் செழிக்க செய்துள்ளனர் பாண்டிய மன்னர்கள்.

பாண்டியர்களை பின்பற்றி தொடர்ந்து சேதுபதிகள் ஆட்சிக்காலத்தில் பராமரிப்பு செய்து, புதியவைகளை உருவாக்கி பாதுகாத்துள்ளனர். பல புதிய நீர்நிலைகளை உருவாக்கி, அதனைச் சுற்றி உருவான மக்கள் குடியிருப்புகள், அந்தந்த நீர் நிலைகளின் பெயரால் அழைக்கப்பட்டனர்.

சிவகங்கை விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டங்களில் உருவான குடியிருப்புகளில் 795 கிராமங்கள், குளம், ஏந்தல் என முடியும் வகையில் உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள மிகப்பெரிய கண்மாய்களில் ஒன்றான ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கண்மாய் ஆர்.எஸ்.மங்கலம் கண்மாய் என அழைக்கப்பட்டு வருகிறது. ராஜசிங்க மங்கலத்தில் உள்ள கண்மாய், நதி நீர் இணைப்பை ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பே, பாண்டிய மன்னர்கள் செயல்படுத்திக் காட்டியதற்கு ஆதாரமாக உள்ளது. இக்கண்மாய் நீர் வரத்துக்காக வைகை சருகணி, ஆகிய ஆறுகளில் இருந்து கால்வாய்கள் வெட்டி, இணைத்துள்ளனர்.

இது குறித்து ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத் தலைவர் வே. ராஜகுரு தெரிவித்தாவது: மன்னர்கள் பிராமணர்களுக்கு நிலங்களை கொடையாகத்தரும் போது தம் பெயருடன் சதுர்வேதிமங்கலம், என இணைத்து பெயர் சூட்டுவர். கி.பி.900 முதல் கி.பி. 920 வரை பாண்டிய நாட்டை ஆண்ட மூன்றாம் ராஜசிம்ம பாண்டியன் தனது பெயருடன் இணைத்து ராஜ சிம்ம மங்கலம் என்று பிராமணர்களுக்கு நிலம் தானமாக வழங்கியதை சின்னமனூர் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

ராமநாதபுரம் நயினார் கோயில் சாலையில் பாண்டியூருக்கு அருகில் வைகை நதியிலிருந்து



# வைகை ஆறு

செல்லும் கீழ நாட்டார் கால்வாய் மூலம் தண்ணீர் ராஜ சிங்க மங்கலம் கண்மாய்க்குச் செல்கிறது. இக்கால்வாய் பாணடியூர், சித்தனேந்தல், பந்தப் பபேனந்தல், கவளைக்குளம், நகரம், அரியாங் கோட்டை, ஆகிய கிராமங்கள் வழியாக சென்று 20 கி.மீ. தொலைவில் உள்ள ராஜசிங்க மங்கலம் கண்மாயை அடைகிறது.

சருகணி ஆற்றிலிருந்து வரும் கால்வாய் கல்லடி திடல் என்ற இடத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அதன் ஒரு பகுதி கண்மாய்க்குள் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மற்றொரு பகுதி கோட்டக்கரை ஆறாக கடலுக்குச் செல்கிறது. ராஜசிங்க மங்கலம் கண்மாய் நீர் பிடிப்பு பகுதி 147 சதுர மைல்கள் ஆகும். அதிலிருந்து 72 கண்மாய்களுக்கு நீர் செல்லவும், உபரி நீர் கடலுக்கு செல்லும் வகையில் நீர் மேலாண்மை செய்யப்பட்டுள்ளது.

இக்கண்மாய் சேதுபதிகள் காலத்தில் முறையாக பராமரிக்கப்பட்டு, நீரை வெளி விட 48 மடை வாய்க்கால்கள் அமைக்கப்பட்டன. நாரை பறக்காத நாற்பத்தெட்டு பெருமடைக் கண்மாய் என்ற வழக்குச் சொல் இப்பகுதியில் இன்றும் பேசப்படுகிறது. இக்கண்மாய் மடைகளின் பெயரில் ஊர்கள் உருவாகி உள்ளன. செட்டியமடை, சிலுகவயல், பெருமாள் மடை, புல்லமடை, செங்கமடை, கீழமடை, மேலமடை, ரகுநாதமடை, ராமநாதமடை, வல்லமடை, சூரமடை, என பல ஊர்கள் இன்றும் உள்ளன என அவர் தெரிவித்தார்.

வறண்ட நிலங்களையும், காடுகளையும் அழித்து ஊர் உருவாக்கி, அங்கு விவசாயம் செழிக்க பல வித நீர் நிலைகளை அமைத்ததனால், இப்பகுதியின் பல கிராமங்கள் மிகுதியாக நெல் விளையும் கோட்டையாக மாறியிருந்ததைக் காண முடிகிறது.


**விளம்பர கட்டண விபரம்**

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுபக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுபக்கம்)**
**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுபக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/- **(முழுபக்கம்)**


## தாய் மொழியைக் காப்போம்!

அயலகத்தில் வாழ்கின்ற தமிழே!
தாயகத்தில் தேய்வது ஏன்?
ஆங்கிலம் கலத்தல் தேவைதானா?
மனிதன் தோன்றிய நாள் முதல்
நம் மொழி தமிழும் தோன்றியதாக
வரலாறு வரையறுக்கிறது.

இந்தியத்தில் எத்தனையோ மாநிலம் உண்டு
ஒன்றுக்காவது நாடு என்று பிற்சேர்க்கை உண்டா?
தமிழ்நாட்டுக்குதான் அப்பெருமை உண்டு.
அயல் நாட்டினிலே ஆட்சி மொழியாய்
தமிழ் மொழியும் ஆட்சி செய்யுது
தாய்த்திருநாட்டினிலே ஆங்கிலமும்
இந்தியும் முதன்மையாய் இருக்குது
இதை தட்டிக் கேட்க
அரசியல் அமைப்பு அஞ்சி நடுங்குது
நம் தமிழுக்கு இத்தனை சோதனை
தமிழர்களுக்கு எத்தனை வேதனை!

அன்னை மொழி தமிழ் மொழியாம்
அதைக் காக்க துணிவு இல்லையா
ஆங்கில இந்தி விரும்பிகளே
தமிழை வாழ விடுங்கள் – இன்றேல்
அயல்நாட்டிற்கே ஓடிவிடுங்கள்
தமிழைக் கொல்லாதீர்கள்

**வாணியம்பாடி தியாகராசன்**
9962082032


## அன்னை

மகனுக்கு பிறந்தநாள் விழா
அம்மா கொண்டாடினாள்
அன்னை இல்லத்தில்
அனாதையாக....

மகன் கொண்டாடினான்
மனைவியுடன்
மாமியார் வீட்டில்
மண்டியிட்டு (மானம்கெட்டு)

*பாண்டியன், அசோக்நகர்.*

# சுட உத்தரவிட்டது ராஜ்நாத் சிங்?



தலைமைச் செயலகத்தில் பேட்டியளித்த முதல்வர் எடப்பாடி பழனிசாமி துப்பாக்கிச் சூட்டுக்குத் தான் உத்தரவளிக்கவில்லை என்று இலைமறைகாயாகத் தெளிவுபடுத்திவிட்டார்.

தமிழகத்தின் போலீஸ் துறையை நிர்வகிக்கும் முதலமைச்சருக்கே தெரியாமல் துப்பாக்கிச் சூடு நடத்தித் தமிழக மக்களைக் கொல்ல உத்தரவிட்டது யார் என்று தலைமைச் செயலகத்தில் விசாரித்த போதுதான், அந்த அதிர்ச்சிகரமான பதில் தெரியவருகிறது.

முதல்வர் அலுவலகத்தில் மிகவும் பதற்றமாக இருக்கிறார்கள். தேவையில்லாமல் முதல்வர் மீது பழி போடப்படுகிறது என்று அவர்கள் புலம்புகிறார்கள். அன்று காலை 11 மணியளவில் நிலைமை பதற்ற மானதை ஒட்டி தூத்துக்குடி மாவட்ட காவல் துறையினர் காவல் துறை மேலிடத்தை அணுக, காவல் துறை மேலிடமோ தலைமைச் செயலாளரை அணுகி யிருக்கிறது. அதன்பின் தலைமைச் செயலாளர் டெல்லியைத் தொடர்புகொண்டு உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் பேசியதாகவும் அதன் பின்னர் உள்துறை அமைச்சக உத்தரவின் பேரிலேயே தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிடப் பட்டதாகவும் முதல்வர் அலுவலகத்திலுள்ளவர்கள் வருத்தத்தோடு பேசிவருகிறார்கள். ராஜ்நாத் சிங் உத்தரவின் பேரில்தான் துப்பாக்கிச் சூடு நடந்ததென்றும் ஆனால், அதற்குத் தமிழக முதல்வர் பலிகடா ஆக்கப்படுகிறார் என்பதும் அவர்களது வருத்தம்.

தமிழகக் காவல் துறை அதிகாரி களுக்கு மத்திய உள்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர் வழி யாக உத்தரவு வருவது ஒன்றும் புதிதல்ல என்கிறார்கள் காவல்துறை வட்டாரத் தில். தமிழகத்தில் உள்ள மசூதிகளில் கூம்பு வடிவ ஒலிபெருக்கி பயன்படுத்தக் கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் பட்டது. அந்த நிலையில் கடந்த வருடம் ஒவ்வொரு மசூதிக்கும் முஸ்லிம் விவகாரங்களைக் கையாளும் அந்தந்த லோக்கல் உளவுத்துறை அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள். கூம்பு வடிவ ஒலிபெருக்கியை மாற்றிவிடு மாறும் இது அரசு உத்தரவு என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

மசூதிகளில் இருந்து இது தொடர்பாக ஒரு முஸ்லிம் கட்சியின் தலைவரிடம் விஷயத்தைச் சொல்லியிருக் கிறார்கள். அந்த தலைவர் உடனடியாக டி.ஜி.பி. அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு “மாநில அரசு இதுபோல ஏதும் உத்தரவு போட்டிருக்கிறதா?“ என்று கேட்டுள்ளார். அப்போது அந்தத் தலைவரிடம் ஆஃப் த ரெக்கார்டாக டிஜிபி அலுவலகத்தில் சொன்ன தகவல், “இது மாநில அரசு உத்தரவில்லை, மத்திய அரசின் வாய்மொழியான உத்தரவு! என்று நட்பு ரீதியில் சொல்லியிருக்கிறார்கள்.

ஆக தமிழக அரசு நிர்வாகத்தைத் தள்ளிவைத்து விட்டு மத்திய உள்துறை அமைச்சகம், தமிழக தலைமைச் செயலகம், டிஜிபி அலுவலகம், காவல்துறை அதிகாரிகள் என்றுதான் டெல்லியின் உத்தரவுகள் செல் கின்றன. முதல்வர், அமைச்சர் என்ற பதவிகளுக் கெல்லாம் டெல்லி மதிப்பளிப்பதே இல்லை. அதிகாரிகள் மூலமாகத்தான் அன்றைக்கும் உத்தரவிட் டப்பட்டது. தூத்துக்குடி துப்பாக்கிச் சூடுக்கும் அதிகாரிகள் வழியாகவே உத்தரவிடப்பட்டிருக்கிறது என்கிறார்கள் தலைமைச் செயலக வட்டாரத்தில்.

**மின்னம்பலம்**




# இப்போது நீங்கள் நடத்தவேண்டியது நீட் தேர்வுக்கு எதிரான ஜல்லிக்கட்டு

*நீட் தேர்வுக்குப் பின் உள்ள சர்வதேச அரசியல் தெளிவாக விளக்கும் டெல்லி பேராசிரியர்*

*இது ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் ஒல்லியமான தேகம்கொண்ட அந்த இளைஞர் பிரபலமான ஒரு கல்லூரியில் சேர்வதற்கான நேர்காணலுக்குச் செல்கிறார். நேர்காணல் தொடங்கிய ஒரு சில நிமிடங்களிலேயே அவருக்கு அந்தக் கல்லூரியில் சேர்வதற்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது. அதற்குக் கூறப்பட்ட காரணம், நீங்கள் இந்திவழியில் கற்றவர் என்பதுதான், அந்த இளைஞர் பதற்றப் படாமல் சொல்கிறார், "ஓ, அப்படியா...சரி நீங்கள் எனக்கு வாய்ப்பு மறுக்கும் காரணத்தை ஒரு துண்டுச் சீட்டில் எழுதித்தாருங்கள். அந்தச் சீட்டை எடுத்துக்கொண்டு நான் ராஷ்டிரபதி பவனுக்குச் செல்கிறேன். நான் இந்தியில் படித்ததால் எனக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது என்று கூறுகிறேன். பன்மைத்துவமான ஒரு தேசத்தில், ஒருவனுக்குத் தன் தாய்மொழியில் படிக்க உரிமையில்லையா? என்று ஜனாதிபதியிடம் கேட்கிறேன் என்கிறார். தேர்வுக்குழு வாயடைத்துப் போகிறது. அவரது கேள்வியல் உள்ள நியாயம் புரிந்து இப்போது அந்த மாணவனைக் கல்லூரியில் சேர்த்துக்கொள்கிறது. அந்த மாணவர் இந்தியாவின் முக்கியமான கல்வி செயற்பாட்டாளரான பேராசிரியர் அனில் சடகோபால்.*

*தற்போது அனில் சடகோபால் இந்தியா முழுவதும் பயணித்து நீட் தேர்வுக்கு எதிராகத் தீவிரமாக பிரசாரம் செய்துவருகிறார்.*

*சென்னைக்கு 220517 அன்று நீட் தேர்வு சம்பந்தமாக பொதுப்பள்ளிக்கான மாநில மேடை ஒருங்கிணைத்த ஒரு கூட்டத்துக்கு வந்தவரிடம் பேசினோம்.*

**ஒரு கல்வியாளராக இருந்துகொண்டு ஏன் நீட் தேர்வை எதிர்க்கிறீர்கள் நம் கல்வித்துறை மேம்பட வேண்டும் என்று உங்களுக்கு விருப்பம் இல்லையா?**

"நான் கல்வியாளர், பேராசிரியர் என்பதனால்தான் நீட் தேர்வை எதிர்க்கிறேன். நீட் தேர்வினால் கல்வித் தரம் மேம்படும் என்பது மக்களை ஏமாற்றும் வேலை சொல்லப்போனால், நீட் தேர்வு இந்திய அரசியல மைப்புச் சட்டத்துக்கே எதிரானது".

**"எப்படிச் சொல்கிறீர்கள்?"**

"அரசியலமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு பத்தியும் சமூகநீதியையும், சமத்துவத்தையும் பரிந்துரைக்கிறது. ஆனால், இந்த நீட் தேர்வு, அதற்கு நேரெதிராக இருக்கிறது. இந்தியா என்பது ஒற்றைத் தேசம் கிடையாது. அது, பல்வேறு தேசிய இனங்கள் வாழும் மாநிலங்களின் தொகுப்பு. பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மாணவர்களின் திறனை ஆராய ஒற்றைத் தேர்வு என்பது சுத்த அயோக்கியத்தனம். எப்படி எதுவும் இதுவரை சேராமல் இருக்கும் வட கிழக்கு மாணவனும், எல்லா சௌகர்யங்களையும் பெற்ற டெல்லி மாணவனும் போட்டி போடுவான். இருவருக்கும் ஒரே தேர்வு என்பது மக்களை மடையர்கள் ஆக்கும் வேலை இல்லையா? அது மட்டுமல்ல, புதிய கல்விக் கொள்கையை மக்கள் மன்றத்தில் வைக்காமல், அதில் உள்ள சரத்துகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றும் வேலையைத்தான் இந்திய அரசாங்கம் செய்துவருகின்றது. அதில் ஒரு பகுதிதான் இந்த நீட் தேர்வு.

**சரி...அப்படியானால் இன்னும் அதே பழைய கல்விக் கொள்கையைத்தான் தொங்கிக்கொண்டு இருக்க வேண்டுமா....காலத்துக்கு ஏற்றாற்போல் புதிய கல்விக்கொள்கை வேண்டாமா?**

கண்டிப்பாக மாற வேண்டும். நிறுவனங்களின் நலனுக்கானதாக இல்லாமல், நம் மாணவர்களின் நலனுக்கானதாக இருக்கவேண்டும். ஆனால், இப்போது நம் கல்விக் ரொகள்கையைப் பெரும் நிறுவனங்கள் வடிவமைத்துக் கொண்டிருக்கின்றன. அதன் பிரதிநிதிகளாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பு ஆகியவை வடிவமைத்துக் கொண்டிருக்கின்றன. மாணவர்களின் நலன் முதன்மை பெறாமல், முதலாளிகளின் நலன்தான் இந்தக் கல்விக் கொள்கையில் முதன்மையானதாக இருக்கிறது. உலக மூலதனம் இந்தியக் கல்வித் துறையின் மீது ஒரு யுத்தத்தைத் தொடுத்திருக்கிறது. அந்த மூலதனம் தேசத்துக்கு, மக்களுக்கு, இயற்கை வளங்களுக்கு என யாருக்கும் விசுவாசமாக இருக்காது. அது லாபத்துக்கு மட்டும்தான் விசுவாசமாக இருக்கும், அந்த மூலதனத்தின் பிள்ளைதான் "நீட் தேர்வு".

**புரியவில்லை, நீட் தேர்வுக்கும் உலக வர்த்தக அமைப்புக்கும், உலக மூலதனத்துக்கும் என்ன சம்பந்தம்?**

"உலக வர்த்தக அமைப்புக்குச் சில வாக்குறுதிகளை இந்திய அரசு அளித்துள்ளது. அதில், ஒன்று இந்தியச் சுகாதாரத் துறையை முழுவதும் தனியார் மயமாக்குவது. அதில் தங்கு தடை இல்லாமல், அந்நிய நிதியை அனுமதிப்பது. இது நிறைவேற வேண்டுமானால், இந்தியப் பொது சுகாதாரத் துறையைச் சிதைக்க வேண்டும். அதைச் சிதைக்கத்தான் இந்த நீட் தேர்வு."

**"இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல முடியுமா?"**

இப்போதுள்ள மருத்துவக் கல்வி முறையில் மாணவர்கள் சில காலம் கிராமத்தில் பணியாற்ற வேண்டும். அதற்கான ஒதுக்கீடு இருக்கிறது. ஆனால், நீட் தேர்வில் அதற்கான வாய்ப்பே இல்லை. இதனால், கிராம மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அழியும். அந்த இடத்தில் தனியார் மருத்துவமனைகள் வரும் நீங்கள் நீட் தேர்வைத் தட்டையாகப் புரிந்து கொள்ளாமல் இந்தப் பின்னணியில்தான் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நீட் தேர்வைச் சர்வதேச அரசியல் அல்லாமல் சமூகநீதி கண்ணோட்டத்தில் பார்த்தீர்கள் என்றால், வாய்ப்பு மறுக்கப்பட்ட பின்தங்கிய சமூக மக்களை, மருத்துவத் துறையில் உள்ளே வரவிடாமல் பார்த்துக்கொள்ளும் அரசியல் தெரியும்".

**"தகுதியானவர்கள்தானே மருத்துவத் துறையில் வரவேண்டும்"?**

"தகுதி எதை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது? தாழ்த்தப்பட்ட பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த ஒரு மாணவன் கடினப்பட்டு படித்து, நல்ல மதிப்பெண் பெற்று மருத்துவப் படிப்பு வாய்ப்புக்காகக் காத்திருக்கும் போது, அவன் மீது நீட் தேர்வைத் திணிக்கிறீர்கள். கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அவனால், நீட் தேர்வுக்கானச் சிறப்பு வகுப்பில் பணம் கொடுத்து சேர முடியுமா? ஆனால், பணம் கொடுத்து சிறப்பு வகுப்புகள் சேர முடிந்த ஒரு மாணவனையும், பணம் கொடுத்து சேர முடியாத ஒரு பழங்குடி மாணவனையும் ஒன்றாக ரேசில் ஓடுங்கள் என்கிறீர்கள். கொஞ்சம் மூளையிலிருந்து யோசிக் காமல், மனதிலிருந்து யோசியுங்கள். உங்கள் மாநிலத்திலேயே அனைத்து மாவட்டங்களுக்கும் அனைத்து வசதிகளும் கிடைத்துவிட்டதா? நான் இங்கு பேசிக்கொண்டிருக்கும்போது, விழுப்புரம், ராமநாதபுரம் மாவட்டங்கள் எல்லாம் பின்தங்கி இருக்கின்றன என்றனர். அப்படியானால், அந்த மாவட்டங்களில் உள்ள பிள்ளைகள் எப்படிச் சென்னை மாவட்டப் பிள்ளைகளுடன் போட்டிபோட முடியும்? ஒரு மாநிலத்திலேயே இவ்வளவு சிக்கல் இருக்கும்போது, பல்வேறு தேசிய இனங்கள், மதங்கள், சாதிகள், பாகுபாடுகள் உள்ள ஒரு தேசத்துக்கு ஒற்றைத் தேர்வு சரி வருமா?

**"சரி, இதற்கு என்னதான் தீர்வு?**

கூட்டாட்சி தத்துவத்தை மதிப்பதுதான் தீர்வு. தமிழகம்தான் எங்களுக்கு நீட் தேர்வு வேண்டா மென்று சட்டம் இயற்றிவிட்டது. கூட்டாட்சி தத்துவத்தின் படி, அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

கல்வியை வணிகமாகப் பார்க்காமல் இலவசமாக்க வேண்டும். அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்க வழிவகை செய்யவேண்டும். முதலாளித்துவ தேசமான ஜெர்மனியும் சரி..கம்யூனிச தேசமான கியூபாவும் சரி, கல்வியை வணிகமாகப் பார்க்கவில்லை. ஆனால், இவ்வளவு பாகுபாடு உள்ள ஒரு தேசம் கல்வியை வணிகமாகப் பார்க்கிறது. அதிலிருந்து வருபவர்களை ஒற்றைத் தேர்வில் எடைபோடுவோம் என்கிறது".

**"ஆனால், தமிழகம் மட்டும்தானே நீட் தேர்வைத் தீவிரமாக எதிர்க்கிறது"?**

"ஆம், அதற்கு நீங்கள் பெருமை கொள்ள வேண்டும். இது, அயோத்திதாச பண்டிதர், பெரியார் உங்களுக்கு ஏற்படுத்திய ஞானம், மற்ற மாநிலங் களைவிட உங்களுக்குத்தான் எது சமூக நீதி என்று தெளிவாகத் தெரிந்திருக்கிறது. அதனால்தான், அதற்கு ஏதேனும் சிறு உராய்வு ஏற்படும்போது நீங்கள் கிளர்ந்தெழுகிறீர்கள், போராடுகிறீர்கள். உண்மையில், தமிழ் மக்கள் நடத்தும் போராட்டங்கள் இந்தியாவின் பிற இனமக்களுக்கானதும்தான். மற்ற மாநிலங்கள் ஜல்லிக்கட்டு நடத்த முடியாமல் இருக்கும்போது நீங்கள் வெற்றிகரமாக ஒரு போராட்டத்தை நடத்தி ஜல்லிக்கட்டை நடத்திவிட்டீர்கள். இப்போது நீங்கள் நடத்தவேண்டியது நீட் தேர்வுக்கு எதிரான ஜல்லிக் கட்டு".

**நன்றி: ஆனந்த விகடன்**

குடிப்பழக்கம் என்றவுடன் எல்லோருடைய சிந்தனையும் ஆண்கள் பக்கமே திரும்பும். இது பெண்கள் பக்கமும் திரும்ப வேண்டிய காலம். விமானம் ஓட்டும் பைலட்டுகள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் பணியைத் தொடங்கும் முன் 'ப்ரிபைலட் ஆல்கஹால் டெஸ்ட்' க்கு உட்படுத் தப்படுவார்கள். அவர்கள் விமானம் ஓட்டுவதற்கு 12 மணி நேரத்துக்கு முன்புவரை எந்த போதைப் பொருளும் உட்கொண்டிருக்கக்கூடாது. குறிப்பிட்ட அந்த நேரத்திற்குள் மது அருந்தியிருந்தால் அந்தப் பரிசோதனை மூலம் கண்டுபிடித்து விடுவார்கள். சமீபத்தில், அத்தகைய சோதனை ஒன்றில் ஏர் இந்தியாவின் பெண் விமான பைலட் ஒருவர் சிக்கினார். இந்தப் பிரச்சினை 'டைரக்டர் ஜெனரல் ஆப் சிவில் ஏவியேசன்' வரை கொண்டு செல்லப்பட்டது. அந்த பெண் மூன்று மாதங்கள் விமானம் ஓட்டும் பணியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டார்.

டெல்லியில் பிருத்தி என்ற 36 வயதுப் பெண் குடிபோதையில் கார் ஓட்டிச் சென்றார். அரியானா ஹைவேயில் சாலைப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் மீது தாறுமாறாக காரை மோதினார். அதில் இரண்டு பேர் உயிரிழந்தார்கள். சிலர் படுகாயமடைந்தார்கள்.

'ஆர்கனைசேசன் பார் இகனாமிக் கார்பரேசன் அண்ட் டெவலப்மண்ட்' என்ற அமைப்பு மது அருந்துபவர்கள் பற்றி எடுத்த 'சர்வே' ஒன்றில் அதிர்ச்சியான பல தகவல்கள் வெளிவந்துள்ளன. உலக ளாவிய அந்த ஆய்வுப்படி மது அருந்து பவர்களின் எண்ணிக்கையில், இந்தியா உலக அளவில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது. இதற்கு பெண்களும் குடிக்க ஆரம்பித்து விட்டது ஒரு காரணம். கடந்த 10 ஆண்டுகளில் குடிக்கும் பெண்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்து விட்டது. உலக சுகாதார மையத்தின் கணிப்புப்படி இந்தியாவில் தற்போது குடிக்கும் பெண்களின் எண்ணிக்கை 11 சதவீதம் ஆகிவிட்டது.

மது அருந்துவது இப்போது 'பேசன்' ஆக்கப் பட்டிருக்கிறது. சமூகத்தில் தன்னை உயர்ந்தவராக காட்டிக் கொள்ள விரும்பும் பெண்கள் குடிக்கி றார்கள். குடிக்க மறுப்பவர்கள் பழமைவாதிகள் என்று



கேலி செய்யப்படுகிறார்கள். குடிப்பதன் மூலம் சுதந்திரத்தை அனுபவிப்பதாகவும் சிலர் நினைக்கிறார்கள். இந்த நிலை தொடருமானால் பெண்கள் பல இழப்புகளுக்கு ஆளாவார்கள். குடிப்பதில் எந்தப் பயனுமில்லை. அதனால் பெண்களின் உடல் நிலைதான் கெடுகிறது.

குடிக்கும் ஆண்களை விட பெண்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இது விஞ்ஞானபூர்வாமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ராஜீவ்காந்தி கேன்சர் இன்ஸ்ட்டிட்யூட் சார்பில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், டாக்டர் இந்து அகர்வால் என்பவர் போதைப் பொருட்கள், ஆண்களைவிட பெண்களின் ரத்தத்தில் வேகமாக கலக்கிறது. அதனால் ஆண்களைவிட பெண்கள் இரு மடங்கு பாதிப்பிற்குள்ளாகிறார்கள் என்கிறார்.

மது குடிக்கும் பெண்கள் அதிகமாக பாதிக்கப்பட என்னென்ன காரணங்கள் தெரியுமா?

பெண்கள் மென்மையான உடல்வாகு கொண்டவர்கள். ஆண்களின் உடலில் தண்ணீர் அதிகம். பெண்களில் உடலில் கொழுப்பு அதிகம். தண்ணீரில் கலக்கும் மதுவின் தீவிரம் குறைகிறது. ஆனால் கொழுப்பில் கலக்கும் மதுவின் தீவிரம் வெகுநேரம் நீடிக்கிறது. மது அருந்தும் பெண்களால் சீக்கிரம் தெளிவு நிலைக்கு வர முடியாது.

பெண்களின் உடலில் இருக்கும் 'என்சைம்'களின் அளவு குறைவு. அதனால் ஆல்ஹகால் ரத்தத்தில் அதிக அளவு கலந்து, உடல் போதையை சமன்படுத்த முடியாமல் தவிக்கும். போதையின் விளைவுகள் அதிகமாகி, மூளையையும் வெகுவாகப் பாதிக்கும்.

பெண்களுக்கு மாதவிடாய் நாட்களில் ஹார்மோன் சுரப்பில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படும். அப்போது அவர்கள் மது அருந்தினால், போதையின் தாக்கம் அதிகமாக இருக்கும். அந்த நேரத்தில் அவர்களது மனநிலையில் சீரற்ற நிலை உருவாகி, தன்னை மீறிய செயல்களில் ஈடுபடுவார்கள். இதனால் சமூக அந்தஸ்து குறையும். குடும்ப வாழ்க்கை பாதிக்கும். நட்பு, சுற்றம், அலுவலகத்திலும் கெட்ட பெயர் ஏற்படும்.

மது அருந்தும் பெண்களுக்கு கல்லீரல் வெகுவாகப் பாதிக்கும். வீக்கம், வலி தோன்றும். பின்பு அவர்கள் மது அருந்துவதை விட்டுவிட்டு முறையான சிகிச்சை பெறாவிட்டால் கல்லீரல் முழு அளவில் பாதிக்கப்பட்டு உயிரிழக்க நேரிடும். ஆண்களைவிட பெண்களுக்கு கல்லீரல் பாதிப்பு அதிகமாக உருவாகும்.

பெண்களில் மது அருந்துவர்களுக்கு அளவுக்கு அதிகமான சோர்வு ஏற்படும். குடிக்காத நேரங்களிலும் அந்தச் சோர்வு நீடிக்கும். மது அருந்தும் பெண்களின் உடலில் வைட்டமின் பி12 சத்து மிகவும் குறைந்து போகும். அதனால் மயக்கம், தலைசுற்றல், ஞாபக மறதி போன்றவை ஏற்படும்.

மது, உடலில் அதிகமான பசியைத் தோற்றுவிக்கும். அதனால் பெண்கள் நிறையச் சாப்பிடுவார்கள். அதுவும் கலோரி அதிகம் கொண்ட ருசியான உணவுகளை கண்டபடி சாப்பிடுவார்கள். உடல் எடை அதிகரிக்கும். அப்போது பல்வேறு நோய்கள் உடலில் குடி கொள்ளத் தொடங்கிவிடும்.

மது உள்ளே போனதும் அதிக அளவு ரத்தத்தில் கலந்து, ரத்த அழுத்தத்தை உயர்த்தும். அதனால் அவர்களிடம் பதற்றமும், பரபரப்பும் தோன்றும், செயல்திறன் குறைந்து போகும்.

மது அருந்தும் பெண்களுக்கு மலட்டுத்தன்மை உருவாகும். கர்ப்பிணிகள் மது அருந்தினால் கருச்சிதைவு தோன்றும். கருமுட்டையையும் பாதிக்கும். ஒருவேளை அவர்கள் கர்ப்பம் தரித்து குழந்தையை பெற்றெடுத்தாலும், குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படும். கடந்த ஐந்து ஆண்டுகளில் முப்பது விழுக்காடு அளவுக்கு பெண்களிடம் மலட்டுத்தன்மை அதிகரித்திருக்கிறது. அதற்கு மதுப்பழக்கமும் முக்கிய காரணமாகும்.

விளையாட்டுத்தனமாக ஆரம்பிக்கும் மதுப் பழக்கம் பெண்களை அலைக்கழித்து, அவர்களை வாழ்க்கையின் எல்லைக்கே துரத்திச் சென்றுவிடும். தூக்கமின்மை அவர்களிடம் தோன்றும். வாழ்க்கையில் விரக்தியை ஏற்படுத்தி தற்கொலைக்குக் கூட தூண்டும்.

மது, பெண்களின் மூளையையும் எளிதாகப் பாதிக்கும். நினைவாற்றலை குறைக்கும். மூளை நரம்புகளை செயலிழக்கச் செய்வதால் காக்காய் வலிப்பு ஏற்படும் அபாயமும் உள்ளது. நரம்புகள் பலவீனமாகி ரத்த ஓட்டம் குறையும். அப்போது வெயிலில் நிற்க வேண்டி வந்தால் மயக்கம் ஏற்படும்.

கர்ப்பகாலத்தில் பெண்கள் மது அருந்துவது, வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு விசத்தைக் கொடுப்பதற்குச் சமமாகிறது. தாயின் தொப்புள் கொடி வழியாக மது குழந்தைக்குள் நுழையும். இளம் ரத்தத்தில் கலந்து வெகுநேரம் சஞ்சரிக்கும். குழந்தையின் செரிமான உறுப்பு வளர்ச்சியடையும் அந்நேரத்தில் ஆல்ஹகால் உள்ளே சென்றால், அது குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

மதுப்பழக்கம் உள்ளவர்களுக்கு தலை, கழுத்து, ஜீரண உறுப்புகள், குடல், மார்பகம், கல்லீரல் போன்றவைகளில் புற்றுநோய் வர வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

●



# சேது கால்வாய் எங்கே தோண்டினாலும் ஆபத்தா?

## டி.எஸ்.எஸ். மணி

சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் ராமர் பாலத்தை உடைக்காமல் கட்டப்படும் என்று உச்சநீதி மன்றத்தில் நடுவண் அரசு எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்த காரணத்தால், சுப்பிரமணிய சுவாமி, சேது கால்வாய் திட்டத்தை எதிர்க்கும் தனது வழக்கைத் திரும்பப் பெற்றுள்ளார். அதாவது, சேது கால்வாய்த் திட்டத்தை, நமது சுற்றுச்சூழல்வாதிகளும், மீனவ இயக்கங்களும் கூறுவதுபோல, மீனவர் வாழ்நிலையை அழித்துவிடும் என்பதற்காகவோ, சுற்றுச்சூழலைக் கெடுத்துவிடும் என்பதற்காகவோ, பா.ஜ.க.வோ சு.சுவாமியோ எதிர்க்கவில்லை. மாறாக, ராமர் பாலம் என்று அவர்கள் அழைக்கின்ற ஆதம் பாலம் வழியாக அந்தத் திட்டம் தோண்டப்படும் என்பதற்காகவே எதிர்க்கிறார்கள்.

ராமர் பாலம் என்பது புராணச் சின்னம். ஆகவே, அதை உடைக்க அனுமதிக்க மாட்டோம். ஆகவே, வேறு பாதை மூலம் அதே சேது கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று இன்றுள்ள நடுவண் அரசில் ஆட்சி நடத்தும் பா.ஜ.க.சொல்கிறது.

இன்று மட்டுமல்ல, என்றுமே அது இப்படித்தான் வாதம் செய்து வருகிறது. ஆனால், சேது கால்வாய்த் திட்டம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் போடபப்பட்ட போதிலிருந்து, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சூழல்வாதிகளும் மனித உரிமையாளர் களும் மீனவர் சங்கங்களும் அந்தத் திட்டத்தை முழுமையாக எதிர்த்து வருகின்றனர். அந்தத் திட்டம் மன்னார் வளைகுடாவின் சுற்றுச்சூழலை உடைத்து விடும் என்றும் ஐந்து லட்சம் மீனவர்களின் வாழ்வா தாரத்தைக் கெடுத்துவிடும் என்று அவர்கள் பல்வேறு ஆவணங்களுடன் எதிர்த்துப் போராடி வருகின்றனர்.

சேது கால்வாய்த் திட்டம் தமிழ்நாட்டை பொன் விளையும் பூமியாக்கிவிடும் என்ற நம்பிக்கையில் அண்ணா காலத்திலிருந்து தி.மு.க.வும், எம்.ஜி.ஆர். காலத்தில் அதிமுக, மதிமுக மற்றும் பல்வேறு தமிழர் அமைப்புகளும் கூறிவந்தன. ஆங்கிலேயன் அக்காலத்தி லிருந்து பலமுறை சேது கால்வாய்த் திட்டம் பற்றிய ஆய்வுகளை, இந்திய ரயில்வேயும் மற்றும் சில நடுவண் அரசின் நிறுவனங்களும் கணித்துப் பார்த்தன. ஆனால், அவற்றில் எல்லாம் அது சாத்தியப்படும் என்ற விடை கிடைக்கவில்லை. ஆகவே, அது தொடங்கவில்லை. ஆனால், தி.மு.க. நடுவண் அரசில் காங்கிரஸ் தலைமை யிலான ஐ.மு.கூவில் இருக்கும்போது, அமைச்சர் டி.ஆர்.பாலு கைகளில் கப்பல் துறை இருக்கும்போது,

அவரால் வலியுறுத்தப்பட்டு அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. அப்போது ஆ.ராஜா நடுவண் அரசின் சுற்றுச்சுழல் துறை அமைச்சராக இருந்தார். நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அனுமதி இல்லாமல் திட்டம் தொடங்கப்பட முடியாது.

மன்னார் வளைகுடாவின் முக்கியத்துவம் அன்றைய நிலையில், அனைத்து நாட்டு பசுமை அமைதி இயக்க அறிவியலாளர்களின் ஆவணங் களையும் சென்னைப் பல்கலைக்கழக மானுடவியல் துறைத் தலைவர் பேராசிரியர் சுதர்ஷன், பேராசிரியர் சுமதி ஆகியோரின் ஆய்வு ஆவணத்தையும் அடிப்படையாகக் கொண்டு, சுற்றுச்சூழல்வாதிகள் அந்தத் திட்டத்தை எதிர்த்தனர். அந்த ஆவணங்களில், மன்னார் வளைகுடா ஒரு பயோ ஸ்பியர் ரிசர்வ் பகுதி என்று ஐநாவின் யுனெஸ்கோ மூலம் அங்கீகரிக்கப் பட்டு, அதைப் பாதுகாக்க யுஎன்டிபி என்ற ஐ.நா.வளர்ச்சித் திட்டம் பல கோடிகளைச் செலவழிக் கிறது. சேது கால்வாய் திட்டம் வந்தால் அந்த பயோ ஸ்பியர் ரிசர்வ் அழிந்துவிடும் என்றார்கள். அதுபோலவே, அரிதான விலங்குகளான கடல் குதிரைகள் ஆறு மாதங்கள் ஆதம் பாலத்திற்கு ஒருபுறமும் அடுத்த ஆறு மாதங்கள் வெப்பம் காரணமாக மறுபுறமும் சென்று உயிர் வாழும். அவை அழிந்துவிடும் என்றார்கள். அதுமட்டுமல்ல, தூத்துக்குடிக்கும் ராமேஸ்வரத்துக்கும் மத்தியில் உள்ள 21 தீவுகளில் பவளப் பாறைகள் உள்ளன என்றும் அவை சேது கால்வாய் தோண்டினால் அழிந்துவிடும் என்றும் கூறினார்கள்.

உள்ளபடியே, இந்த 21 பவளப் பாறைகளைக் கொண்ட, தீவுகள்தான் 2004ஆம் ஆண்டு கடைசியில் சுனாமி வந்தபோது, சுனாமியின் வேகத்தைத் தடுத்து நிறுத்தி, சிறு பாதிப்புகூட இல்லாமல் தூத்துக்குடி நகரையும் ராமேஸ்வரம் நகரையும் காப்பாற்றின என்ற உண்மையைச் சுற்றுச்சூழல்வாதிகள் முன்வைத்தார்கள். அது மட்டுமின்றி, சென்னை பல்கலைக்கழகப் பேராசிரியரின் ஆவணத்தின்படி, ஐந்து லட்சம் மீனவர்களின் வாழ்வாதாரம் கெட்டுவிடும் என்பதையும் மீனவர் சங்கங்கள் முன்வைத்தன.

இத்தகைய எதிர்ப்புகளைக் கேள்விப்பட்ட அன்றைய முதல்வர் ஜெயலலிதா, அதிகாரிகள் மூலம் செயற்பாட்டாளர்களின் ஆவணங்களைப் பெற்று தனது நிலைப்பாடான சேது சமுத்திரத் திட்ட ஆதரவு நிலையை மாற்றிக்கொண்டார். தி.மு.க.கொண்டு வந்ததால் மாற்றிக்கொண்டார் என்று கூறுவோரும் உண்டு. ஆனாலும், அதிகாரப்பூர்வமான நிலைப் பாட்டின் படி, சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் நிலைப்பாட்டில் நின்று அந்தத் திட்டத்தை எதிர்த் தார். அதன் பிறகு அதே நோக்கில் உச்ச நீதிமன்றம் சென்றார்.

இப்போது அவர் மறைந்துவிட்ட நிலையில், அவரது வழக்கை எடுத்துக்கொள்ளாமல், அவரது வாதங்களையும் எடுத்துக்கொள்ளாமல் நீதிமன்றம் நிற்கிறது. உள்ளபடியே, ஜெயலலிதாவின் நிலைப் பாடும் மீனவர் சங்கங்களின் நிலைப்பாடும் சுற்றுச் சூழல்வாதிகளின் நிலைப்பாடும் ஒன்றுதான். எந்த வழியில் சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் வந்தாலும் அது அழிவு. ஆகவே, அது தமிழர்களுக்குப் பெருமை அல்ல: மாறாக வெறுமையே என்ற நிலைப்பாட்டை எடுத்தார்கள். இன்னமும் அவர்கள் அதே நிலையில் உள்ளனர்.

இதற்கிடையே, மதுரையில் பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி ஆகியோருடன் முதல்வர் கருணாநிதியும் சேர்ந்து விழா ஒன்றின் மூலம் திட்டத்தைத் தொடங்கினர். இடையில் ஆக்சிஸ் வங்கியிடம் நடுவண் அரசு, திட்டத்துக்கான கடனைப் பெறச் சொல்லியிருந்தது. ஆனால், உலக வங்கிகள் இத்திட்டம் லாபம் தராது என்பதால் கடன் தர முடியாது என்று கூறிவிட்டன.

எகனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லியில் பெங்களூரைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் ஜான் ஜேக்கப், இந்தத் திட்டம் எவ்வகையிலும் லாபம் தராது என்று கட்டுரை எழுதினார். அதில், ஆப்பிரிக்க கண்டம் தொடங்கி, இங்கே வரும் பெரிய கப்பல்கள் இந்தத் திட்டப் பகுதிக்குள் நுழைய முடியாது என்றும் அவை வந்தாலும் கடலில் செல்லும் வேகத்தைக் குறைக்க எரிபொருள் மாற்றுவதற்குப் பணம், பைலட் ஊதியம், கப்பல் வாடகை, சேது கால்வாயில் நிற்க வாடகை ஆகியவற்றைக் கட்ட வேண்டும் என்றும் ஆகவே அவர்கள் திகைத்துவிட்டார்கள் என்றும் எழுதினார். அவர்களுக்கு லாபமில்லை என்பதால் வர இயலாது என முடிவு செய்ததையும் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் கருங்கடலில் கப்பல்களின் எண்ணெய்ச் சிதறல்களால் கடல் வாழ் உயிரினங்களை அழிந்துவிட்டனவோ...அதுபோல இங்கும் செழிப்பாக உள்ள கடல் வாழ் உயிரினங்கள் அழிந்துவிடும் என்பதையும் சுற்றுச்சூழல்வாதிகள் எடுத்து வைத்தனர். அப்போது நடுவண் அரசோ, இந்தத் திட்டம் இந்திய ராணுவப் பாதுகாப்புக்கு வேண்டும் என்றனர். அதாவது, தமிழர் கடலை அழித்து, மீனவர் வாழ்வைக் கெடுத்து, இந்திய அமெரிக்கக் கட்டுப்பாட்டில் இந்தியப் பெருங்கடலைக் கொண்டு வருவது என்ற அவர்களது திட்டத்தை அறிவித்தனர். ஆகவே திட்ட எதிர்ப்பாளர்களது வாதங்கள் மேலும் வலுப்பெற்றன.

இப்போது இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நடுவண் அரசின் நிர்பந்தம் வருமானால் அதுவே மீண்டும் ஒரு போராட்டச் சூழலை உருவாக்கும். ●

நகைச்சுவை நடிகரும் பா.ச.க பிரமுகருமான எஸ். வி. சேகர், பெண் பத்திரிகையாளர் குறித்த அவதூறான கருத்துகளை தன் முகநூல் பக்கத்தில் வெளியிட்டார். இதுகுறித்து தமிழ்நாடு பத்திரிகையாளர் பாதுகாப்பு நலச் சங்கத்தின் நிர்வாகி கொடுத்த புகாரின் அடிப் படையில், சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் எஸ். வி. சேகர் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் தனக்கு முன்பிணை வழங்க வேண்டும் என்று எஸ் வி சேகர் தாக்கல் செய்திருந்த மனுவை பெண் நீதிபதி எஸ். இராமதிலகம் விசாரித்தார். அப்போது, சேகருக்கு முன்பிணை வழங்கக்கூடாது என்று பத்திரிகையாளர்கள் முரளி கிருஷ்ணன் சின்னத்துரை, ஜெ. கவின்மலர், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம், பெண் வழக் கறிஞர்கள் சங்கம், அகில இந்திய பெண் வழக்கறி ஞர்கள் ஜனநாயகச் சங்கம் உட்பட ஒன்பது பேர் தனித்தனியாக மனுத்தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்களும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டன.

அப்போது சேகர் சார்பில் மூத்த வழக்கறிஞர் ரகுநாதன் முன்பிணை வழங்க எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒன்பது பேர் சார்பில் வழக்கறிஞர்கள் கான்ஷியஸ் இளங்கோ, ஆர். சுதா, டி. ஆர். தாரா, ஆதிலட்சுமி, லோகமூர்த்தி உள்பட பலர் முன்னிலையாகி வாதிட்டார்கள்.



# பிடிக்க முடியாத பயங்கரவாதி சேகர்?

அனைத்துத் தரப்பு வாதங்களை யும் கேட்டறிந்த நீதிபதி, முன்பிணை மனு மீதான தீர்ப்பை தேதி குறிப் பிடாமல் தள்ளி வைத்து கடந்த மே மூன்றாம் நாள் உத்தவிட்டார். இந்த நிலையில் இந்த மனு மீதான தீர்ப்பை நீதிபதி எஸ் ராதிலகம் மே பத்தாம் நாள் பிறப்பித்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

மனுதாரர் தான் ஒரு என்ஜினி யரிங் பட்டதாரி, ஒலிப்பதிவாளர், போட்டோகிராபர், வீடியோ கிராபர், எடிட்டர், இயக்குனர், திரைக்கதை எழுத்தாளர், நடிகர், தயாரிப்பாளர், சமூக ஆர்வலர் என்றெல்லாம் கூறி யுள்ளார். திருமலை ஷா என்பவர் பதி விட்ட தகவலை, படித்துப் பார்க் காமல், தெரியாமல், தன் முகநூலில் வெளியிட்டதாகவும் அதற்காக பகிரங்க மன்னிப்பு கேட்டு விட்ட தகாவும் கூறியுள்ளார்.

ஆனால், இவருக்கு முன்பிணை வழங்கக்கூடாது என்ற எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள், மன்னிப்புக் கேட் பதால், அவர் செய்த தப்பு சரியாகி விடாது. ஒரு பெண் உயர்ந்த இடத்து க்கு வரவேண்டும் என்றால், முக்கிய நபர்களுடன் படுக்கையை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று சேகர் பதிவிட்டுள்ளார். அதை தங்களால் ஜீரணிக்க முடியவில்லை. மூத்த குடி மகனான சேகர், பெண்களுக்கு எதி ரான வார்த்தையை எப்படி பயன் படுத்த வேண்டும் என்று நன்றாகத் தெரிந்து இருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

கோபத்தில் ஒருவரை ஒருவர் அவதூறு வார்த்தைகளைப் பயன்படுத்தி திட்டிக்கொள்வது என்பது வழக்கமானதுதான். அப்படி திட்டிக் கொள்பவர்கள், பின்னர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்வார்கள். ஆனால், ஒரு கெட்ட வார்த்தை எழுத்து வடிவில் வெளியிடும்போது, அதனால் ஏற்படும் பின்விளைவுகளை தொடர்புடைய நபர்கள் நன்றாக உணர்ந்து இருப்பர்.

மற்றொருவர் எழுதிய பதிவைத்தான் தன் முகநூலில் வெளியிட்டதாக மனுதாரர் கூறுகிறார். ஆனால், அவ்வாறு பிறரது பதிவை வெளியிடும்போது, அதில் உள்ள கருத்துகளை ஏற்றுக் கொண்டதாகத்தான் அர்த்தம். என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதை விட யார் சொன்னது, என்பது முக்கியமானது ஆகும். சிலர் சமுதாயத்தில் மதிக்கப்படும் நபராக இருப்பார்கள். அப்படி மதிக்கப்படும் நபர், இது போன்ற பெண்களுக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டால், அந்தக் கருத்து உண்மை என்றுதான் பொதுமக்கள் நம்புவார்கள்.

மனுதாரர் பதிவில், பெண்களை மறைமுகமாக விமர்சிக்கவில்லை. நேரடியாக விமர்சனம் செய்துள்ளார். இதுபோன்ற அவதூறு கருத்துகளை மனுதாரரிடம் இருந்து யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். தலைவர்கள் என்பவர்கள் தங்களை பின்பற்றுபவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். சமூக வலைதளங்களில், உணர்ச்சிக் கொந்தளிப்பினால், இதுபோன்ற அவதூறு கருத்துக்களை வெளியிடும் இளைஞர்கள் பலர் கைது செய்யப்படுவதை நாம் தினமும் பார்க்கிறோம். சட்டம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. நீதித்துறையின் மீதான நம்பிக்கையை பொதுமக்கள் இழந்து விடக்கூடாது.

தவறுதலாகச் செய்யும் ஒரு செயலும் குற்றச் செயலும் ஒன்றாகி விடாது. குழந்தைகள் மட்டுமே தவறு செய்வார்கள். அதனால் அவர்கள் மன்னிக்கப் படக் கூடியவர்கள். ஆனால், இந்தச் செயலை பெரியவர்கள் செய்தால் அது குற்றமாகும். வேலைக்குச் செல்லும் பெண்கள் எல்லாரும் தன்னுடைய கர்ப்பை பணையம் வைத்துதான் முன்னேறுகிறார்கள் என்ற அவதூறு கருத்து, பெண்களின் எதிர்காலத்தை அழித்து விடும். இதுபோன்ற கருத்து, பெண்கள் குறித்து தவறான எண்ணத்தை சமுதாயத்தில் உருவாக்கி விடும். வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பெண்கள் மத்தியில் ஒரு வித அச்சத்தையும் பதற்றத்தையும் உருவாக்கும்.

பிரபலமான நபரான சேகர், பெண்களுக்கு எதிராக தெரிவித்துள்ள இந்தக் கருத்து வேலைக்குச் செல்லும் பெண்கள் மீது சமுதாயம் ஒரு சந்தேகப் பார்வையை ஏற்படுத்தும். இதுபோன்ற செயலை அனுமதித்தால், பொது வாழ்க்கைக்கு பெண்கள் வரவே மாட்டார்கள். இப்போதுகூட சேகர், பிறருடைய பதிவை வெளியிட்டதற்கு தான் வருத்தம் தெரிவிக்கிறாரே தவிர, அந்தப் பதிவில் உள்ள கருத்துக்கு மன்னிப்புக் கேட்கவில்லை. இவர் வெளியிட்டுள்ள பதிவினால், சமுதாயத்தில் என்ன விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. பெண்களை அவதூறாகச் சித்தரிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அவ்வாறு யாராவது செய்தால், அது பெண்களின் உரிமையை மீறிய செயலாகும். ஒருவரை சாதிப் பெயரைச் சொல்லி அழைத்தாலே, அது மிகப்பெரிய குற்றச் செயல். அப்படி இருக்கும்போது, படுக்கையை பகிர்ந்து கொண்டால் மட்டுமே சமுதாயத்தில் முன்னுக்கு வரமுடியும் என்று சொன்னால் தற்போது மிகப்பெரிய பதவியில் இருப்பவர்களுக்கும் இந்தக் கருத்து பொருந்துமா?

நாம் பொது வாழ்வில் இருக்கும்போது நம் செயல்கள் அனைத்தையும் பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். பொதுவாழ்வில் உள்ள தலைவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகள் எல்லாம் சமுதாயத்தில் அமைதியையும் சந்தோசத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

ஒரு கருத்தை டைப் செய்து வெளியிட்ட பின்னர், அதை நான் செய்யவில்லை என்று கூறுவதை ஏற்க முடியாது. சமூக வலைதளங்களில் எது வேண்டுமானாலும் வெளியிட்டு விட்டு, அதன் பின்னர் மன்னிப்பு கேட்டுக் கொள்ளலாம் என்று பொதுமக்கள் யாரும் இனி நினைக்கக்கூடாது. மனுதாரரின் பதிவில் உள்ள கருத்து ஒரு பெண்ணை மட்டும் அவதூறாகக் குறிப்பிடவில்லை. ஒட்டுமொத்த பெண் இனத்தையே அவதூறு செய்வதாக உள்ளது. இந்தப் பதிவை வெளியிட்டதற்காக, எஸ்.வி.சேகர் வீட்டுக்கு முன்பு போராட்டம் நடத்திய பெண் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கும் போது, பிரச்சினைக்கு மூல காரணமான எஸ்.வி.சேகர் மீது மட்டும் சட்டத்தின்படி ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை என்ற எண்ணம் பொதுவாக எல்லோரிடமும் ஏற்படும். எனவே, எஸ். வி. சேகருக்கு முன்பிணை வழங்க முடியாது. அவரது முன்பிணை மனுவை தள்ளுபடி செய்கிறேன். மேலும், சாதாரண மனிதனுக்கு எதிரான வழக்கை போலீசார் எப்படி விசாரிப்பார் களோ, அது போலத்தான் மனுதாரர் வழக்கையும் விசாரிக்க வேண்டும். இவ்வாறு நீதிபதி தனது உத்தரவில் கூறியுள்ளார்.

நீதிபதி இப்படி கூறியிருந்தும் இதுநாள்வரை சேகரை காவல்துறை கைது செய்யவில்லை. இதற்கிடையில் சேகர் பலமுறை பொதுவெளிகளில் அரசுக்கு நெருக்கமானவர்களுடன் பேசுகிறார், போகிறார், வருகிறார். இவரை கைது செய்யாமல், கண்டுகொள்ளாமல் இருக்கும் காவல்துறை ஒரு மதுரைப்பெண் முகநூலில் ஒரு பதிவைப் போட்டு விட்டார் என்று சென்னையில் கைது செய்துள்ளது. ஆனால், சேகரை ஏன் இன்னும் சேவித்துக் கொண்டி ருக்கிறது அரசு? மருமம் என்ன?

**வேர்மகள்.**



# பொடுகு (Dandruff)

தலையில் மாவு போன்ற இறந்த செல்கள் உதிர்வது இயற்கையான நிகழ்வு. இவை மிகுதியாகத் தோன்று தலோடு புருவம் போன்ற பகுதியிலிருந்தும் இவை உதிர்ந்து தோள்பட்டையில் நிறைந்து காணப்படும் நிலையை நாம் தலைப்பொடுகு என்கிறோம். இவை ஒரு வகை காளான் வகைக் கிருமிகளால் தோன்று கின்றது.

முன்பெல்லாம் அதற்குப் பெயர் Pityrosporum என்பதாகும். ஆனால் இப்போது அதன் பெயர் Malassezia என்பதாகும். இது இருபாலருக்கும் குறிப்பாக வயது வந்த பின் தோன்றும் சாதாரண நோய். கிட்டத்தட்ட 50 விழுக்காடு மக்கள் இந் நோயால் பாதிக்கப்படுகின்றனர். இது பெரும்பாலும் வயதுக்கு வந்த ஆண் பெண்களில் தோன்றி கிட்டத் தட்ட இருபது வயதுகளில் மிகுதியான மக்களையும் அதன் பின் நோய்பாதிப்பு குறையத் துவங்கி விடு கின்றன. இது தலையில் அரிப்பு அதாவது நமைச்சலை உண்டாக்கி விடுகின்றன. குளிர்காலங்களில் இதன் தாக்கம் அதிகப்படுகிறது.

தோல் வறட்சி தவிர்க்க முடியாதவையாகின்றன என்றாலும் ஹார்மோன் மாற்றங்களில் சீபம் என்ற தோலில் உள்ள எண்ணெய்க் கோளங்களின் உற்பத்தி மிகுதியானாலும் மன அழுத்தம் Stress சில வகை நரம்பு வியாதிகளில் உதாரணமாக நடுக்கு வாதம் Parkinson’s disease பக்கவாத நோயில் இருந்து மீண்டும் வரும் நிலை இருதய நோயாளிகள் போன்ற நிலைகளில் இவை தோன்றலாம். சமீப கால ஆய்வுகள் மூன்று காரணங்களால்தான் இவ்வகைப் பொடுகுகள் தோன்றுகின்றன. முதல்காரணம் Sebum என்ற எண்ணெய்க்கோளங்கள்அடுத்தது Malasezia yeast என்ற வகை காளான் கிருமிகள் மூன்று ஒவ்வாமை.

இவையன்றி அனுபவங்கள் உணர்த்தும் உண மைகள் வேறு. உணவு வகைகள், Acidic food என்ற அமிலமிகு உணவு வகைகள் குறிப்பாக ஒவ்வாமையை உண்டாக்கும் உணவுவகைகள், உதாரணமாக எலு

மிச்சை, அகத்திக்கீரை, தக்காளி, கத்தரிக்காய், பாகற்காய், பூசணி, மீன், கோழி, போன்றவை மிகுதிப் படுத்துகின்றன. இரண்டாவதாக மிக முக்கியக் கார ணங்களாக்க கருதப்படுவன ஒவ்வாமை, சுற்றுப்புறச் சூழல் மாசு உடலில் ஒவ்வாமையைத் தோற்றுவித்து நீர்க்கோவை Sinusitis உண்டாக்கி, அவற்றால் தலையில் உள்ள எண்ணெய்க் கோளங்களைத் தூண்டி பொடுகிற்கு வித்திடுகின்றன. சுற்றுச்சூழல் மாசு வெப்ப மயமாதல் காரணமாக கட்டுப்படுத்த இயலாமல் உள்ள நிலையில் பெரும்பாலானவர்களைப் பாதிக் கின்றன. அத்தோடு அதிக வெயில், குளிர், தூசு இவை களும் அதனை மிகுதிப்படுத்தும் காரணிகளாக உள்ளன.

மன அழுத்தம் Stress மிகுதியான நிலையில் நேரடியாகவே பொடுகுத் தொல்லைகளை உருவாக்கு கின்றன உண்ணும் உணவு, குடிநீர், சுற்றுச்சூழல் இவை இரசாயன மாற்றம் உண்டாக்கி அழுத்தத்தை உண்டாக்கி விடுகின்றன. இவற்றை நாம் Chemical stress என அழைக்கிறோம். இவை மன அழுத்தத்தை உண்டாக்குகின்றன. பலருக்கு பருவகால மாற்றங்கள் Seasonal changes பாதித்து விடுவதுண்டு. அதைப் போலவே நவீன உலகில் (Cosmetic) அழகு சாதனப் பொருட்களை) சந்தைப்படுத்தி அதன் உபயோகத்தைப் பெருக்கி, Shampoo போன்றவற்றை அதிகமாக உபயோகிப்பதன் காரணமாக அதிகப்படுகின்றன. பாரம்பரிய, சிகைக்காய், உசிலந்தூள், பயத்தமாவு போன்றவற்றின் பயன்பாடுகள் அறவே ஒழிக்கப் பட்டுவிட்டன.

இவையன்றி பல்வேறு வகையான நோய்களிலும் இவ்வகைப் பொடுகினைக் காணலாம். முதன்மையாக Seborrhoeic dermatitis என்ற தலைக்கரப்பான் நோயில் இவ்வகைப் பொடுகு உதிர்தல் தலையாய குறிகளுள் ஒன்று. அதைப்போலவே Tinea என்ற தலைப்பில் தோன்றும் காளான் கிருமிகளின் தாக்க நோயிலும் (தலையில் தோன்றும் படர்தாமரை) இவ்வகைப் பொடுகு நோய் தோன்றும். Psoriasis என்ற நோயிலும் தலையில் பொடுகும் செதிலும் தோன்றி உதிர்ந்து கொண்டே இருக்கும். இவையன்றி Allergic contact dermatitis என்ற ஒவ்வாமைக் கரப்பான் நோயிலும் இக்குறிகள் தோன்றுகின்றன. இவையன்றி உடலை மிகவேகமாக பலவீனப்படுத்தும் நோய்களான, நீரிழிவு, புற்று நோய், இளைப்பு நோய் T.B அல்லது இவற்றிற்கு மருத்துவம் செய்யும் நிலையிலும் இக்குறிகள் தோன்றுகின்றன. இவை, பின் தலையில் வறட்சியையும், அழற்சியையும் உண்டாக்கிவிடும். இதனால், எரிச்சலும் நமைச்சலும் ஏற்படுகின்றன. மென்மை தன்மையை தோல் அடைகின்றன. இவற்றுக்கு மருத்துவம் செய்வதை விட ஆரம்ப நிலையிலேயே அவற்றைத் தடுப்பதும் தவிர்ப்பதும் நல்லது. அடிக்கடி தலைக்கு சிகைக்காய், பயத்தமாவு, உசிலைத்தூள் இவற்றைக் கொண்டு வாரம் இருமுறை தலைக்குளிப்பது அவசியம். எண்ணெய்க் குளியல் விதிகட்கு உட்பட்டு குளிப்பது மிக மிக நல்லது. உடலுக்கு ஏற்ற தைலங்களை காலை வேளைகளில்

1 நாழிகை (24 நிமிடம்) மிகாமல் ஊறவைத்த பின் தைலத்திற்குத் தகுந்த பொடிகளைக் கொண்டு தேய்த்துக் கழுவுவது. எண்ணெய் தேய்த்துக் கொண்டு வெயிலில் திரிதல், பகல் உறக்கம், குளிர்ச்சியான வகை உணவுகளை உண்பதைத் தவிர்க்க வேண்டும். இதுதான் விதி. உடலும் நோயும் இவற்றின் நிலையறிந்து அவற்றிற்குத் தகுந்த உணவு வகைகளை உண்ணுதல் அவசியம்.

மலச்சிக்கலை முற்றிலுமாக தவிர்க்க, காலை வேளைகளில் தண்ணீர் அருந்த வேண்டும். சரியான அளவு உடற்பயிற்சி, உறக்கம், ஓய்வு, தியானம் இவை களைக் கிரமமாகப் பின்பற்ற வேண்டும். அடிக்கடி தலையில் விரல்களைக் கொண்டு தேய்ப்பதும் தவிர்க்கப்பட வேண்டும். இது மிகப்பெரிய நோயல்ல 50 சதவீதம் குறிப்பாக பெண்களில் அதிகம் பேர் இந்நோயால் வருந்துகின்றனர். இந்நோய் கண்டவர் களின் முடி உதிரலாம். ஆனால் முடி வளர்வதைத் தடுப்பதில்லை.

எளிமையான மூலிகை மருந்துகளால் மிகச் சிறப்பாக மருத்துவம் செய்து கொள்ளலாம். சாதாரண மாக தேங்காயெண்ணெயை சிறிது சூடாக்கி கற்பூரத்தை அதில் இடுக. கற்பூரம் கரைந்து விடும். பின் இரவு நேரங்களில் சிறிதளவு தலைக்குத்தேய்த்து விடுக. கண்கள் குளிரும், பொடுகு பெருமளவில் குறையும். அதைப்போலவே தேங்கா எண்ணெயை சிறிது சூடாக்கி எலுமிச்சம் பழச்சாற்றைக் கலந்து தலையில் 20 நிமிடங்கள் ஊறவைத்துப் பின் தலைகுளித்து விடுக. இதுவும் நல்ல பலனைத் தரும்.

சிறிதளவு தயிர், எலுமிச்சம் பழச்சாறு, பச்சைப் பயிறு மாவு மூன்றையும் ஒன்றாய்க் கலந்து பசை போன்ற நிலை அடைந்ததும் அதனை தலைமுழுதும் தேய்த்து விட்டு அரைமணிநேரம் கழித்து குளித்து விடுக இது நல்ல மருந்து. எலுமிச்சைச்சாற்றை சிறி தளவு தயிரோடு கலந்து தலைக்குத் தேய்த்துக் குளித்தலும் பலன்தரும். சிகைக்காயை வழக்கமாக ஒவ்வொரு வீட்டிலும் வைத்திருந்தது போய் shampoo காலத்தில் காணாமல் போய்விட்டது. சிகைக்காயை கலப்பு Paste செய்து தலையில் தடவி ஊறவைத்து தலை கழுவி வர நல்ல பலன் உண்டாகும். இவையன்றி

சாதாரணமாக வேப்பிலையை அரைத்து சிறிதளவு எலுமிச்சைச் சாற்றைக் கலந்து தலைக்குத் தடவி அரைமணி நேரம் ஊறவைத்தத்தப்பின் கழுவிக்கொள்க. வாரம் இருமுறை தொடர்ந்தால் நல்லபலன் உண்டாகும்.

அல்மெண்ட் எண்ணெய் Almond oil, olive oil ஆலிவ் எண்ணெய் சம அளவில் கலந்து தலையில் நன்றாக மசாஜ் செய்க. பின் தலைக்கு சாம்பு இட்டு கழுவிக்கொள்க. சாதாரணமாக கடைகளில் (Vinegar) வினிகர் கிடைக்கும் வினிகர் சிறிதளவு எடுத்து வெந்நீர் கலந்து தலைக்குத் தடவுக. மிகச் சிறந்த Hair conditioner. புதினா இலைகளை அரைத்து அத்தோடு Apple eider vinegar கலந்து சிறிதளவு தண்ணீர் சேர்த்து கொதிக்க வைத்து ஆறவிடுக. அதனைப் பின் விரல் நுனியில் தொட்டு தலைமுடியின் வேர்ப்பகுதியில் மசாஜ் செய்தலும் நல்ல பலனைத் தரும். சிறிதளவு எலுமிச்சை சாற்றோடு 10 சொட்டு சந்தன எண்ணெய் கலந்து நன்றாகக் குலுக்கி அதையும் தலைக்குப் பூசலாம்.

சாதாரணமாக நெல்லிக்காய் அத்தோடு சிறிதளவு துளசி இலை இவற்றை ஒன்றாய் நீர் சேர்த்து அரைத்து தலைக்குப் பூசிக் கொண்டால் பொடுகு நீங்கும். சோற்றுக் கற்றாழை இதன் உட்பகுதியில் உள்ள சோற்றை தலைக்குத்தடவி இரவு முழுதும் ஊறவிட்டு பின் காலையில் கழுவிக் கொள்ள நல்ல பலன் உண்டாகும். முட்டையின் வெள்ளைக்கரு அத்தோடு சிறிதளவு நீர் கலந்து அந்தக்கலவையை தலைக்குத் தேய்த்து ஊறவிட்டு பின் Shampoo இட்டுக் கழுவி னாலும் நல்லபலன் உண்டாகும்.

சாதாரண வெந்தயத்தை இரவுமுழுதும் நீரில் ஊற வைக்கவும். பின் ஊறிய வெந்தயத்தை பசைபோல் அரைத்து தலைக்குத்தடவி அரைமணிநேரம் கழித்து கழுவிவிட நல்லபலன் கிடைக்கும். பொடுகுத் தொல்லை என்பது அனைவருக்கும் வந்து போகும் வியாதி. வராமல் தடுத்து விடுவதே நல்லது. எளிய மருத்துவ முறைகளால் நீக்கிக்கொள்வதும் மிகச் சிறந்த ஒன்று.



# நடிக்காமல் நாட்டை ஆள்வீர்!

உழைக்காமல் உண்ணுகின்ற கூட்டம் ஒன்று
உதவாத கதைபேசி வளர்த்துக் கொள்ள
பிழைப்பிற்கு வழிதேடி கைகள் தட்ட
பிதற்றுகின்ற பேச்சுக்கே கைகள் தட்ட
அழைக்காத விருந்தினராய்ச் சேர்ந்து கொண்டு
ஆரவாரம் செய்கின்ற மனிதர் எல்லாம்
நிலைக்காது எனவறிந்தும் கூட நின்று
நெஞ்சையும் நிமிர்த்திடுவார் நித்தம் நித்தம்

மேடைகள் தோறுமேறி முழங்கிப் பேசி
மினுமினுக்கும் ஆடைக்குள் காட்சியாகி
பாட்டாளி மக்களையும் கவர்ந்து கொள்ள
படுகவர்ச்சித் திட்டங்கள் நிறையக் கூறி
நாட்டையே ஆள எண்ணி நடிப்பார் நன்றாய்
நம்மக்கள் இட்டுவைப்பார் வாக்குச் சீட்டை
கோட்டைக்குள் சென்றபின்னர் வீட்டிற்காக
கொள்கையைக் கொள்ளையாய் மாற்றிக் கொள்வார்.

படிக்காத மேதைபலர் ஆட்சி செய்தார்
பக்குவமாய் நாட்டையவர் ஆண்டு சென்றார்
அடிக்காமல் கொள்ளைகளைத் தடுத்து நின்றார்
அறிவாய்ந்தோர் உரைக்கேட்டு நன்மை செய்தார்
நடிக்காமல் அலுக்காமல் நாட்டை ஆண்டார்
நன்மைகள் செய்வதிலே குறியாய் நின்றார்
வடிக்காமல் கண்ணீரை நாட்டு மக்கள்
வளமாக வாழ்ந்தனரே ஆண்ட நாளில்

**கவிஞர். திரு. இராமன்.**

ஒரு இளைஞன் தன் திறமையை வெளிப்படுத்த வேண்டுமென்றால் அவனைச் சுற்றி இருப்பவர்கள் அவனைஉற்சாகப்படுத்த வேண்டும். அனுபவமிக்க திறமைசாலிகள்தங்கள் வாழ்க்கையில் கற்றுக் கொண்டதை புதிய தலைமுறைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். இப்படிச் செய்தால் அவர்கள் இவ்வுலகில் எதையாவது சாதிக்க முடியும்.

ஒரு இளைஞன் சாதிக்கநினைக்கும் துறையைப் பற்றியஅனைத்து விவரங்களையும் அவன் அறிந்திருத்தல் வேண்டும். சாதிப்போம்! என்ற வெறும் வாய்ப்பேச்சு மட்டும் இருத்தல் போதாது. அதை செயலிலும் முன்னிறுத்தல் வேண்டும்.

சி. நீனு, மாணவி, சென்னை.

# அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஆபத்து மனித உரிமைகள் மீது தாக்குதல்

## பாஜக அரசு குறித்து கோவா கிறிஸ்தவ பிஷப் எச்சரிக்கை



நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் ஆபத்தில் இருக்கிறது, ஏராளமான மக்கள் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள், மனித உரிமைகளும், ஜனநாயகமும் ஆபத்தில் இருக்கிறது என்று கோவா டாமன் கிறிஸ்தவ பிஷப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிறிஸ்துவர்களின் பேஸ்டோரல் ஆண்டு ஜுன்1ம் தேதி தொடங்கியதையடுத்து, கோவாடாமன் கிறிஸ்தவ பிஷப் பிலிப் நெரி பெராரியோ அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் பாஜக ஆட்சி குறித்து மறைமுகம் கிறிஸ்துவ மக்களுக்கும் எச்சரித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

2019ம் ஆண்டு பொதுத்தேர்தல் வருவதால், மக்கள் அனைவரும் அரசியலமைப்புச்சட்டத்தை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அதைப் பாதுகாக்கும் முறையையும் அறிந்து கொள்ள வேண்டும்.

இப்போது நம்நாட்டில் மனித உரிமைகளும், ஜனநாயகமும் மிகுந்த தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றன. இதனால், பெரும்பாலான மக்கள் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்து வருகிறார்கள்.

சமீப காலமாக நம் நாட்டில் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் சம்பவங்கள் நடக்கின்றன. நம்நாடு வேற்றுமையிலும் ஒற்றுமை உள்ள நாடு. ஆனால், ஒரேமாதிரியான தன்மையை புகுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதாவது நாம் என்ன சாப்பிட வேண்டும், எப்படிச் சாப்பிட வேண்டும், எப்படி உடை அணிய வேண்டும், எப்படி வாழ வேண்டும், வழிபாடு செய்யவேண்டும் என்று வலிந்து திணிக்கப்படுகிறது.

ஒரே கலாச்சாரம் மக்களிடம் வலியுறுத்தப்படுகிறது.

மனித உரிமைகள் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. ஜனநாயகம் மிகுந்த ஆபத்தில் சிக்கி இருக்கிறது. கிறிஸ்தவர்கள் மட்டுமின்றி, பல்வேறு சிறுபான்மையினரும் தங்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலுடன் எதிர்நோக்குகின்றனர். நம் நாட்டில் சட்டத்துக்கான மதிப்பு குறைந்து வருகிறது.

நாட்டின் வளர்ச்சி என்ற பெயரில் ஆண்டுக்கணக்கில் வாழ்ந்த மக்கள் அவர்கள் சொந்த மண்ணில் இருந்து கட்டாயப்படுத்தி அப்புறப்படுத்தப்படுகிறார்கள். மக்கள் சொந்தமாகக் கட்டிய வீடுகள் அவர்களிடம் இருந்து பிடுங்கப்படுகின்றன. புனித போப் பிரான்சிஸ் வளர்ச்சியைப் பற்றி கூறுகையில், வளர்ச்சியின் முதல் பலிகடா நாட்டின் முதல் ஏழைக் குடிமகன் என்று கூறினார். அதுதான் இங்கு நடக்கிறது.

ஏழைமக்களின் உரிமைகளை எளிதாகப் பறித்து காலில் போட்டு மிதித்து விடுவது எளிது. ஏனென்றால், அவ்வாறு நடக்கும் போது எதிர்ப்புக் குரல் உயர்த்துவோர் மிகச்சிலர்தான். இந்த நேரத்தில் கிறிஸ்தவர்கள் அனைவரும் அரசியல், சமூக அவலங்களைத் தீர்க்க பங்கெடுக்க வேண்டும். நம்பிக்கையுடன் அரசியலில் உங்களின் பங்களிப்பை ஆற்ற வேண்டும்.

நாட்டில் குழந்தைகளுக்கு போதுமான அளவுக்குச் சத்தான உணவுகள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சர்வதேச மக்கள் தொகையில், 30 சதவீத சத்து குறைபாடுள்ள குழந்தைகள் இந்தியாவில் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஏன் இந்த அதீதமான ஏழ்மை நம்நாட்டில் நிலவுகிறது. நாட்டில் 73 சதவீத வளங்களை வெறும் 10 சதவீத மக்கள் கட்டுப்படுத்துகிறார்கள், அனுபவிக்கிறார்கள். நாட்டில் உள்ள எஞ்சியுள்ள மற்ற மக்கள் கடும் வறுமையில் உழல்கிறார்கள். இதுதான் சமூகநீதியா. இவ்வாறு ஆர்ச்பிஷப் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் இதேப்போன்று டெல்லி ஆர்ச்பிஷப் அனில் குட்டோ கிறிஸ்தவ மக்களுக்கும் கடிதம் எழுதினார். அதில் நாட்டில் அச்சுறுத்தலான, அசாத்திய அரசியல் சூழல் நிலவுகிறது. நாட்டின் ஜனநாயக மதிப்புகளுக்கும், மதச்சார்பற்ற தன்மைக்கும் அச்சுறுத்தல் நிலவுகிறது என்று கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார் என்பது கவனிக்கத்தக்கது ●

## வாட்ஸ்ஆப் கொண்டுவந்துள்ள புத்தம் புதிய அம்சம்: என்ன?


வாட்ஸ்ஆப் நிறுவனம் தொடர்ந்து புதிய அம்சங்களை கொண்டுவந்த வண்ணம் உள்ளது, தற்சமயம் மெசேஜ்களை அடுத்தவர்களுக்கு ஃபார்வேர்டு செய்யும் போது லேபெல் செய்யப்படுகிறது. இந்த அம்சம் புதிய பீட்டா (2.18.179) பதிப்பில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த புதிய அம்சம் மூலம் உண்மையான மெசேஜ்கள் மற்றும் பார்வேர்டு செய்யப்பட்ட மேசேஜ்கள் மெசேஜ்கள் என எளிமையாக வித்தியாசப் படுத்திக் கொள்ள முடியும். பின்பு இந்த அம்சத்துடன் புதிய கான்டாக்ட் ஷார்ட்கட் அம்சம் வழங்கப்பட்டுள்ளது. இது பயனர்களுக்கு மிக எளிமையாக கான்டாக்ட்களை சேமிக்க உதவுகிறது. தற்போது வாட்ஸ்ஆப் நிறுவனம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 'கிளிக் டூ சாட்'(Click to Chat) வசதியின் மூலம் உங்களின் கான்டேக்ட் லிஸ்டில் இல்லாத எண்களுக்கு கூட மெசேஜ் அனுப்ப முடியும்.

மெசேஜ் அனுப்பவேண்டியவரின் மொபைல் எண் தெரிந்தால் உடனடியாக உரையாடலை துவங்கலாம். ஆனால் அவரிடம் வாட்ஸ்ஆப் கணக்கு இருக்க வேண்டும். இல்லையெனில் வாட்ஸ்ஆப் சாட் செய்யமுடியாது. வாட்ஸ்ஆப்பின் ஆண்ட்ராய்டு பீட்டா தளத்தில் காணப்பட்டுள்ள இந்த அம்சமானது, வாட்ஸ்ஆப் வழியாக கிடைக்கும் மீடியாக்களை போன் கேலரியில் காட்சிப்படுத்தலாமா அல்லது வேண்டமா என்கிற அதிகாரத்தை பயனர்களுக்கு வழங்கும். அறியாதோர்களுக்கு, இந்த அம்சம் ஏற்கனவே வாட்ஸ்ஆப் ஐஓஎஸ் பதிப்பில் உள்ளது என்பதை குறிப்பிட விரும்புகிறோம். சமீபத்தில் காணப்பட்ட இந்த வாட்ஸ்ஆப் அக்கவுண்ட் அம்சத்தின் வழியாக, ஒரு பயனர் தனது அக்கவுண்ட் பற்றிய தகவல் அறிக்கையை கேட்கலாம்.

இந்த இந்த தகவலானது, உங்கள் செய்திகளைப் பற்றிய விவரங்களை எண்ட் டூ எண்ட் குறியாக்கத்தின் கீழ் பாதுகாக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதை கோரிய மூன்று மூன்று நாட்களுக்குள் அறிக்கையை உருவாக்கம் பெற்று, அடுத்த சில வாரங்களுக்குள் அது பதிவிறக்கம் செய்ய கிடைக்கும். Featured Posts வாட்ஸ்ஆப் ஆனது பேஸ்புக் நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதை நாம் அறிவோம். அதனால் இந்த புதிய அம்சம் அறிமுகம் ஆவதில் எந்த ஆச்சரியமும் இல்லை. இது பயனர்களுக்கு 'Send To Whatsapp' விருப்பத்தின் மூலம் உடனடியாக ஒரு இணைப்பை பகிர அனுமதிக்கும். இனி டிராப் டவுன் மெனுவில் உள்ள ஷேர் விருப்பத்தை அணுக வேண்டிய அவசியம் இருக்காது


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**










திரைப்பட
இசைக்கலைஞர்கள்
சங்கத் தேர்தலில்
வெற்றி பெற்ற
தலைவர் திரு. தினா,
செயலாளர் திரு சாரங்கன்,
பொருளாளர் திரு. குருநாத்,
இணைச் செயலாளர்
திரு. ஜோனா பக்தகுமார்
ஆகியோரை
செந்தமிழ்நாடு
ஊடகவியலாளர்கள் சங்கத்தின்
தலைவர்
திரு. விசவனூர் வே. தளபதி
அவர்கள் வாழ்த்தினார்.

ஜெய் ஆர்ட்ஸ் உரிமையாளர்
திரு. ஜெயச்சந்திரன்
அவர்களது புதுமனை புகுவிழாவில்,
செந்தமிழ்நாடு
ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர்
விசவனூர். வே. தளபதி அவர்கள்
கலந்து கொண்டு
திரு. ஜெயச்சந்திரன் அவர்களை
வாழ்த்தினார்.



MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

